www.padippakam.com

1—15 நவம்.'92 ரூ.2.50

DEC 1992

மண்டல்: உச்சநீதிமன்ற மோசடி

# புதிய ஜனநாயகம்




## அயோத்தி: ஜெயாவின் கடப்பாரை சேவை

படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை நோயல்ல அரசின் கொலை

**தீவிரமாக பரவும் காலராவைத் தடுக்க அரசு மருத்துவ மனைகளிலோ அடிப்படை மருந்துகளே இல்லை; போதுமான ஊழியர்களும் இல்லை.**

''சென்னையில் 8 பேர் பலி; இராமநாதபுரத்தில் 3 பேர் மாண்டனர்; மதுரை மாவட்டத்தில் 31 பேர் சாவு; தஞ்சை, மீஞ்சூர், சின்னமனூர், ஆண்டிபட்டி, பேர்னாம்பட்டு பகுதிகளில் இறந்தவர்களின் தொகை மொத்தமாக 25-க்கும் மேல்.'' கூட்டிப் பாருங்கள்; இறந்தவர்களின் எண்ணிக்கை நூறுக்கும் குறைவாக இருக்கும். ஆயின், 200 பேர் பலியாகியுள்ளனர் என்கிறது இடது 'கம்யூனிஸ்ட்' கட்சியின் மாநில செயற்குழு அறிக்கை.

படித்தவுடன் அதிர்ச்சியூட்டக்கூடிய செய்தி; எதனால் இப்படி? பஞ்சாப், காஷ்மீர் போன்று 'அமைதி பூங்கா' தமிழகத்திலும் தீவிரவாதிகள் பெருத்துவிட்டனரா? சமீப நாட்களாக பெய்த மழையினால், ஊழிக்கால பெருவெள்ளம் ஏற்பட்டு 'பாவிகளை' அடித்துச் சென்றுவிட்டதா? இல்லை, மனித நாகரீகத்துக்கே சவால் விடும் மதவெறியினால் எழுந்த கலவரத்தினாலா?

இவை எதனாலும் அல்ல; பின்? காலரா என்ற தொற்றுவியாதியால். மீண்டும் அதிர்ச்சிதான். மலேரியா, காலரா, அம்மை போன்ற ஆட்கொல்லி தொற்று நோய்களையெல்லாம் ஒழித்துக்கட்டி விட்டோம் என அரசு மார்தட்டி கொண்டிருக்கும் நேரத்திலா இப்படி? கடந்த அக்டோபர் மாத செய்தித்தாள்களைப் புரட்டிப் பாருங்கள். இவை யாவும், அரசே ஒத்துக் கொள்ளும் விவரங்கள் என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

இந்த நோய் தீவிரமாக பரவிக் கொண்டிருக்கும் நேரத்தில் அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அடிப்படையான உயிர் காக்கும் மருந்துகளோ, போதுமான ஊழியர்களோ இல்லை என்பதையும் பத்திரிகைகள் சுட்டிக் காட்டுகின்றன.

மதுரை மாவட்டத்திலுள்ள, ஆண்டிபட்டி அரசு மருத்துவமனையில், மருத்துவ மனை வரலாற்றிலேயே இல்லாத அளவு 400-க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றதாக குறிப்பேடுகள் கூறுகின்றன. இம்மருத்துவ மனையில், நோயாளிகள் தங்கி சிகிச்சையெடுக்க, போதிய படுக்கை வசதி இல்லாததினால், உடனுக்குடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள, மாநகராட்சி தொற்று நோய் மருத்துவமனையில் ஒரே படுக்கையில் இரண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. காரணம் கேட்டால், 'இரண்டு பேருமே ஒரே நோயால் பாதிக்கப்பட்டவர்கள்தானே' என்கின்றனர் ஊழியர்கள்.

தீவிரமாக நோய் பரவும் காலங்களில் பிரிவு 11-ஐ ஏற்படுத்துதல், போதுமான ஊழியர்களை ஒதுக்குதல் என்ற நடைமுறைகள் கடைபிடிக்கப்படவில்லை. அதை விடுத்து, ''இது காலரா அல்ல; வயிற்றுப் போக்குதான். காலராயெனில், வாந்தியும் இருக்கும்'' என பூசி மெழுகுவதுடன், ''மக்களின் அலட்சியமே காலராவிற்குகாரணம்'' எனக் குண்டையும் தூக்கி போடுகின்றது அரசு.

குடிநீரும், சாக்கடைநீரும் கலப்பதனாலும்சுகாதாரமற்ற கழிப்பிடங்கள் காரணமாகவும் இந்நோய் மிக வேகமாக பரவுகின்றது. இறந்து போனவர்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் எடுத்துப் பாருங்கள் — அடிப்படை வசதிகளே இல்லாத நகர்ப்புற சேரிகளிலும், கிராமப்புறங்களிலும் வசிக்கும் அன்றாட கூலித் தொழிலாளி குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான்.

தமிழ்நாட்டில் மட்டுமின்றி, பீகார், குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களிலும் இக் கொள்ளை நோய்க்கு 300-க்கும் மேலானோர் பலியாகியுள்ளனர். மகாராஷ்டிராவிலுள்ள தானேயில் மட்டும் 162 பேர் இறந்து போனதாக செய்திகள் வந்துள்ளன. இது போன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் டில்லி, குஜராத் பகுதிகளில் காலராவால் இறந்தோரின் எண்ணிக்கை 1,200-க்கும் அதிகமாகும்.


வருடாவருடம் வெள்ளமும், வறட்சியும் வட, தென் மாநிலங்களைப் பாதிப்பது போல், கொள்ளை நோய் சாவுகளும் வருடாந்திர நிகழ்ச்சி நிரலாகிவிட்டது! சொரணையற்ற மத்திய, மாநில அரசுகளும், ஒட்டுண்ணி அதிகார வர்க்கமும் உருப்படியான எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காததுடன், 'குடிநீரை காய்ச்சி வடித்துக் குடியுங்கள்' என சாதாரண, வழமையான நடைமுறையை காசு செலவில்லாமல், விவிதபாரதி விளம்பரம் போல் கூறுகிறது. இறப்பு எண்ணிக்கை அதிகமானவுடன்தான், தடுப்பூசி போடும் நடவடிக்கையை ஒப்புக்காக அரசு எடுக்க ஆரம்பித்தது. நகரத்திலேயே நிலைமை இப்படி இருக்கையில், கிராமப்புறங்கள் எமனின் பாசக் கயிற்றில்தான்.

பொது சுகாதார வசதியை மேம்படுத்துவதன் மூலம் பல தொற்று வியாதிகள் உருவாவதையே இல்லாது செய்துவிட முடியும். 'மூலதனப் பற்றாக்குறையை ஈடு செய்ய மான்யத்தைக் குறை' என உத்தரவிடுகிறது உலக வங்கி. அதற்கேற்ப, 'விவசாயத்திற்கான மான்யம், பொது சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்குதல் போன்ற சமூக நல திட்டங்களுக்கு கைவிரிக்கிறது ராவ் அரசு. முதல் ஐந்தாண்டு திட்டத்தில், பொது சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடு 3.3 தசவீதமாக இருந்தது. ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் 1.9 சதவீதமாக குறைந்து போனது. இடைப்பட்ட காலத்தில் மக்கள் தொகை பெருக்கத்தையும் கணக்கில் எடுத்துப் பார்த்தால், இந்த ஒதுக்கீடு சோளப்பொறிதான்.

ஏகாதிபத்தியங்களுடன் இணைந்த கூட்டுக் கொள்ளைக்காக, சோமாலியா, எத்தியோப்பியா அரசுகள் சமூக நலத் திட்டங்களைப் புறக்கணித்ததன் கொடூரமான விளைவாக, இன்று அந்நாடுகளில் இலட்சக்கணக்கான மக்கள் சாவின் விளிம்பில் உள்ளனர். நாளை, நமது நாடும் இது போன்று மாறக்கூடிய நிலைதான் இன்றைய எதார்த்தம்!

● செல்வம்

**சென்னையில் காலரா நோயாளிகளைப் பார்க்க மருத்துவமனையில் காத்துக்கிடக்கும் உறவினர்கள்.**




படிப்பகம்

www.padippakam.com

# இட ஒதுக்கீடு வழக்கு: உச்சநீதிமன்ற மோசடி

இட ஒதுக்கீடு - மண்டல் பரிந்துரை அமுலாக்கத்திற்கு எதிரான வழக்கில் சர்ச்சைகளுக்கும் தகராறுகளுக்கும் முடிவு கட்டும் தீர்ப்பைத் தருவதற்கு நாட்டின் உச்சநீதி மன்றம் தவறிவிட்டது. வழக்கை விசாரித்த உச்சநீதி மன்றத்தின் முழு அமர்வுக் குழுவில் உள்ள ஒரு நீதிபதி கூறியதைப்போல, நாடாளு மன்ற அரசியல் தலைமை, அதாவது அரசாங்கம் தானே பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதில் பொறுப்பை உச்ச நீதிமன்றத்தின் வாசலிலே கொண்டு போய்ப் போட்டுவிட்டுத் தப்பிக்க முயன்றது. உச்சநீதி மன்றமோ, "தெளிவான" தீர்ப்பைப் போன்ற தோற்றமுடைய ஆனால், குழப்பமாகவும் மோசடியாகவும் உள்ள தீர்ப்பை வழங்கியதன் மூலம் மீண்டும் அதை நாடாளுமன்ற அரசியல் தலைமையிடம் தள்ளிவிட்டு ஒதுங்கிக் கொள்ள முயன்றுள்ளது.

1990-இல் வி.பி.சிங் தலைமையில் இருந்த ஜனதாதளம் - தேசிய முன்னணி அரசு பிறப்பித்த மண்டல் பரிந்துரை அமுலாக்க உத்திரவு செல்லுபடியாகும்; ஆனால் மண்டல் பரிந்துரையில் கண்டுள்ள இட ஒதுக்கீட்டிற்கான சாதிகளின் பட்டியலில் குறைபாடுகள் உள்ளன. சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் பின்தங்கியவர் பட்டியலில் இட ஒதுக்கீட்டிற்குத் தகுதியில்லாத சில "மேல்" சாதிகள் சேர்க்கப்பட்டுள்ளன; அதற்குத் தகுதியான சில "கீழ்" சாதிகள் விடுபட்டுப் போயுள்ளன. மத்திய, மாநில அரசுகள் அடுத்த நான்கு மாதத்திற்குள் இந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு தனிக் கமிட்டிகள் அமைத்திட வேண்டும். சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் பின் தங்கியவர்களிலேயே வசதிபடைத்த மேல் தட்டுப் பிரிவினரை இட ஒதுக்கீட்டிற்கான வாய்ப்பில் இருந்து விலக்கி வைப்பதற்கான அடிப்படை வரன்முறைகளையும் அந்தக் கமிட்டி வகுத்திட வேண்டும். சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் பின்தங்கியவர்களிலேயே தகுதி அடிப்படையில் இடம் பெற்றுவிட்டால் அவர்களையும் சேர்த்து 27% இட ஒதுக்கீடு கணக்கிடக் கூடாது; மொத்தத்தில் 50%-க்கு மேல் இட ஒதுக்கீடு இருக்கவும் கூடாது; வேலை வாய்ப்புக்குத்தான் இட ஒதுக்கீடே தவிர, பதவி உயர்வுகளுக்கு அது பொருந்தாது; மதச் சிறுபான்மையினருக்கும் இட ஒதுக்கீடு பொருந்தும்; அதேசமயம் (1991 செப்டம்பரில் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசு அரசு) இட ஒதுக்கீட்டில் இடம் பெறாத ஏழைகளுக்கு 10% இட ஒதுக்கீடு செய்து பிறப்பித்த அரசு ஆணை செல்லுபடியாகாது — இவை உச்சநீதி மன்றத் தீர்ப்பின் முக்கிய அம்சங்கள்.

இந்தத் தீர்ப்பு "ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடக்கி ஒடுக்கப்பட்டுவரும் மக்களுக்குக் கிடைத்த சமூகநீதி" என்றும் தங்களுக்குக் கிடைத்த வெற்றி என்றும் மண்டல் கமிசன் பரிந்துரையின் "தீவிர" ஆதரவாளர்களான ஜனதாதளம், தி.மு.க., பா.ம.க., தி.க. போன்ற கட்சிகள் கொண்டாடுகின்றன. தீர்ப்பு வந்த அடுத்த நாளே வி.பி.சிங் தலைமையில் ஒரு பேரணியும், அதற்கு அடுத்த நாள் விழாவும் நடத்தினார்கள். இட ஒதுக்கீடு - மண்டல் பரிந்துரையை சதிகார — சகுனித்தனமான முறையில் எதிர்த்து வரும் காங்கிரசு, பாரதீய ஜனதா, 'மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்' ஆகியவை உட்பட அனைத்துக் கட்சிகளுமே உச்சநீதி மன்றத் தீர்ப்பை வரவேற்றுள்ளன. அதேசமயம் இத்தீர்ப்பை எதிர்த்து மேல் சாதி மாணவர்களின் வன்முறைச் செயல்கள் வட இந்திய நகரங்களில் பெருகி வருகின்றன. இவை கீழிருந்து அவர்களை ஆதரிக்கும் - ஆளும் காங்கிரசு, பாரதீய ஜனதா அரசுகளுக்கே இக்கட்டான பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், உச்சநீதி மன்றத் தீர்ப்பு உண்மையில் எந்தத் தரப்புக்கும் வெற்றி - தோல்வி இல்லாமல் சாதக - பாதக அம்சங்களைப் பகிர்ந்தளித்திருக்கிறது. இட ஒதுக்கீடை கொள்கை ரீதியில் ஏற்கும் இத்தீர்ப்பு, அதை அமுலுக்குக் கொண்டுவர முடியாதவாறு எல்லாத் தடைகளையும் போட்டுள்ளது. சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் பின்தங்கியவர்களுக்குள்ளாகவே வசதிபடைத்த மேல்தட்டுப் பிரிவினரைக் கண்டறிந்து இட ஒதுக்கீட்டில் இருந்து விலக்குவதற்கான வரன்முறைகளை வகுப்பது; மண்டல் பரிந்துரைகளில் உள்ள குறைபாடுகளை அகற்றுவது; அதாவது தகுதியானவர்களைச் சேர்ப்பது தகுதியற்றவர்களை நீக்குவது; இதற்காக மத்திய, மாநில அரசுகள் நியமிக்கும் கமிட்டி முடிவுகள் மீது மீண்டும் உச்சநீதி மன்றத்தில் வழக்குப் போடுவது ஆகியவை இட ஒதுக்கீடு பிரச்சினையையே குளிர்பதனப் பெட்டியில் போட்டுப் பூட்டுவது போன்றதுதான். இந்த வகையில் உச்சநீதி மன்றம் செய்திருப்பது மோசடிதான். இதனால்தான் "தீர்ப்பை நன்றாகப் படியுங்கள்; போராட்டம் தேவை இல்லை" என்று வன்முறையில் இறங்கியிருக்கும் மேல்சாதி மாணவர்களுக்கு மத்திய உள்துறை மந்திரி உபதேசிக்கிறார். அதேசமயம் இட ஒதுக்கீடு - மண்டல் பரிந்துரையை எதிர்ப்பவர்களுக்கும் இந்தத் தீர்ப்பு சாதகமானதல்ல; கொள்கை ரீதியிலும் சட்ட ரீதியிலும் இட ஒதுக்கீடு சரியானதுதான் என்று இத்தீர்ப்புக் கூறுகிறது. இப்போது இல்லாவிட்டாலும் பின்னராவது இட ஒதுக்கீடு அமுலுக்கு வரும். தாங்கள் இப்போது செய்து வருவதைப் போன்று தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த முடியாமற்போகும் என்கிற எச்சரிக்கையாகவே முற்பட்ட சாதிகள் எண்ணுகின்றன. ஆகவேதான் அதன் ஆதரவுக் கட்சிகள் சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டி முற்பட்ட சாதிகளில் உள்ள ஏழைகளுக்கும் இட ஒதுக்கீடு செய்வதற்கு வழிகாண வேண்டும் என்கின்றன. முற்பட்ட சாதி மாணவர்கள் உச்சநீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து வன்முறையில் மீண்டும் வெறியுடன் இறங்கியுள்ளனர்.

இட ஒதுக்கீடு திட்டத்தினால் உண்மையில் பிற்படுத்தப்பட்ட மக்கள் நிவாரணம் எதையும் அடைந்துவிட வில்லை என்றுதான் இதுவரையில் அமைக்கப்பட்ட கமிசன்களின் ஆய்வுகள் காட்டுகின்றன. இதற்குப் பரிகாரம் காணும் வகையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்குத் தனியான இடஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையைச் சிலர் முன்வைத்தனர். அப்படிப்பட்ட ஏற்பாடு செல்லாது என்று இந்த உச்சநீதி மன்றம் தீர்ப்பு கூறுகிறது. அதோடு கல்வியும், தொழிலும் தனியார் மயமாக்கப்பட்டு வருகிறது; ஆகவே இடஒதுக்கீடு என்னும் கானல் நீரைத் தேடியலையாது, உண்மையில் பிற்படுத்தப்பட்ட மக்கள் சாதி ஆதிக்கத்தை ஒழித்து சமூக நீதி காண்பதற்கு அரசியல் புரட்சி வழியில் பயணப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# பாசிச ஆட்சியின் கோரமுகம்

**பாசிச ஜெயா கும்பலின் அதிகார — சுயநலவெறி, வக்கிரம், குரூர இன்பம் காணும் தன்மைகளும் பழிவாங்கும் நடவடிக்கைகளும் அதிகரித்து வருவதற்கு சந்திரலேகாவின் விகாரப்பட்ட முகமும் சாட்சி.**

"என்னை யாரும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது" - இது தான் ஜெயலலிதாவுக்கு மிகவும் பிடித்தமான பேச்சு. இதையே அவரது மூத்த அமைச்சரான நெடுஞ்செழியனில் இருந்து எல்லா எடுபிடி மந்திரிகளும் அடிக்கடி எதிரொலித்து வந்தனர். அவ்வளவும் திமிர்! சட்டமன்றத்தில் ஆளும் கட்சிக்குள்ள மிருகபலம் கொடுத்த அகம்பாவம்! அதன் உறுப்பினர்களின் கொத்தடிமைத்தனம், கூட்டணிக்கட்சியாகவும் "எதிர்க் கட்சி" யாகவும் உள்ள காங்கிரசின் கையாலாகாத் தனம் ஆகியவற்றின் மீதான நம்பிக்கை!

"அரசியலில் எதுவும் நடக்கலாம்" என்கிற இன்றைய அரசியல் பாலபாடம் அவர்களின் அதிகாரபோதையில் குமுங்கிப்போய்விட்டது போலும். விளைவு: எந்த நேரத்தில் கவிழுமோ என்ற நிலையில் ஆட்டங்கண்கொண்டிருக்கிறது - ஆட்சி! ஜெயலலிதாவின் லஞ்ச ஊழலுக்கும் அதிகாரமுறை கேடுகளுக்கும் எதிராக கருணாநிதி நடத்திவரும் போராட்டங்கள் காரியம் முடிந்ததும் காலைவாரும் வகையில் அரசுத் தலைவர் தேர்தல் முடிந்ததும் மூப்பனாரை முடுக்கிவிட்டு சகுனிமாமா நரசிம்ம ராவ் நடத்தும் "சுயமரியாதை" இயக்கம் தன்னை மதிக்கவில்லை என்பதற்காகவே சுப்பிரமணிய சுவாமி துவங்கி இருக்கும் நல்லாட்சி இயக்கம், இவை எதனால் ஜெயலலிதாவின் ஆம் ஆடம்பர - உல்லாச ஆட்சி ஆடிக்கொண்டிருக்கிறது?

"எல்லோரையும் அடக்கியாகிவிட்டது; இனி எதிர்த்துநிற்க யாரும் கிடையாது" என்கிற ஆணவத்தில் ஜெயலலிதா கும்பல் செய்துவரும் கிரிமினல் குற்றங்கள் தான் அதற்கே "எமனா"க வந்து நிற்கிறது.

ஜெயலலிதா ஆட்சியை அகற்றுவதற்குக் கெடுவைத்து "நல்லாட்சி இயக்கம்" நடத்திவரும் சுப்பிரமணிய சுவாமியை "கோமாளி" "மனநோயாளி" என்றெல்லாம் பேசி உதாசீனப்படுத்தி வந்தது ஜெயலலிதா கும்பல். ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகாவின் வடிவத்தில் ஜெயாவின் உல்லாச ஆட்சியின் மீது குண்டைத் தூக்கிப் போட்டு கதிகலங்கச் செய்துவிட்டார் சு.சுவாமி.

ஜெயாவின் லஞ்ச ஊழல், பெருகிவிட்டது; பத்திரிக்கைகளை ஒடுக்குகிறார்; ஈழ விடுதலைப் புலிகளுடன் பாரிசிலும் சிங்கப்பூரிலும் தொடர்பு கொண்டு இரகசியப் பேரம் பேசுகிறார் ஆகிய குற்றச்சாட்டுக்களை முன் வைத்து, நடவடிக்கை எடுக்கும்படி ஏற்கனவே கவர்னரிடம் மனுக்கொடுத்தார்; அவர் அதைக்கிய்பில் போட்டவே, அரசுத் தலைவரிடம் (ஜனாதிபதி) மனுக்கொடுத்தார்; ஜெயாவின் எம்.எல். பதவியைப் பறிக்கும்படி கோரி மத்தியதேர்தல் கமிஷனரைத் தூண்டினார். சு.சுவாமியின் மனுவைக் கிய்பில் போட்ட கவர்னருக்கே அதை தனக்கு அனுப்பும்படி எச்சரித்துத் தேர்தல் கமிஷனர் எழுதிய கடிதங்களையும் வெளியிட்டார்.

ஜெயா ஆட்சியைநீக்கும் நடவடிக்கையின் அடுத்கட்டமாக சு.சுவாமி எடுத்திருக்கும் ஆயுதம் சந்திரலேகா. மூத்த பெண் அதிகாரியான சந்திரலேகா மீது பட்டப்பகலில் மக்கள் நெரிசல் மிகு சென்னை - எழும்பூர் ரயில்நிலையம் எதிரில் பம்பாய் இரகசிய உலக மாஃபியா கும்பலால் கடந்த மே மாதம் திராவகம் வீசப்பட்டது. மூன்றுபேர் கையும் களவுமாகப் பிடிபட்டு, குற்றத்தையும் ஒப்புக்கொண்டனர். அவர்களை ஜாமீனில் விட்டதோடு, கும்பலின் தலைவனைப் பிடிக்க முடியவில்லை என்ற காரணத்தைக் கூறி வழக்கையோ விசாரணையையோ நடத்தாமல் கைக்கழுவிவிட ஜெயா கும்பல் முயன்றது. தூத்துக்குடி "ஸ்பிக்" ஆலையில் பெரும் பான்மையாக இருந்த தமிழக அரசுக்குச் சொந்தமான பங்குகளை சிதம்பரம் செட்டியார் குடும்பத்துக்கு மிகக் குறைந்த விலைக்கு விற்பதற்கு அதிகாரி சந்திரலேகா ஒப்புதல் தரவில்லை; அவரைப்பதவி மாற்றம் செய்து கோடிக்கணக்கில் லஞ்சம் வாங்கிக்கொண்டு இந்தக் காரியம் முடிக்கப்பட்டது; ஜெயாகும்பலி[ன்] இந்த லஞ்ச ஊழலுக்கு எதிர்ப்புக் காட்டி[ய] தற்காகத்தான் இரகசிய உலகப் பேர்வ[ழி]களை வைத்து சந்திரலேகா முகத்தில் திரா[வ]கம் வீசிக் கோரமாக்கப் பட்டார். இந்[த] குற்றச்சாட்டுகள் பத்திரிக்கைகள், வழி[யே] கசிந்து வெளிவந்தது: இதற்குக் காரண[ம்] ஜெயாதான் என்று பகிங்கரமாகவே கூறி கருணாநிதி ஜெயாமீது வழக்குப்போ[ட] கவர்னரிடம் அனுமதிகோரி மனுக்கொடு[த்]தார்.

ஜெயா கும்பலின் லஞ்ச ஊழலுக்கு எதிர்ப்புக் காட்டியதற்காக மாஃபியா கும்பலை வைத்து திராவகம் வீசி கோரமாக்கப்பட்ட சந்திரலேகா.



கருணாநிதியின் புகாருக்கு ஆத[ார]மில்லை என்று ஜெயா கும்பலின் கூட்டா[ளி]யான கவர்னர் நிராகரித்து விட்ட நில[ை]யில், சந்திரலேகாவையே பத்திரிக்கை[யா]ளர் கூட்டத்தில் கொண்டுவந்து நிறுத்[தி]னார், சு.சுவாமி "ஸ்பிக்" விவகாரத்[தில்] ஜெயாவுக்கு உடந்தையாக நடக்க மறுத்த[து]தான் தனக்கு நேர்ந்த "திராவக வீச்சு" கொடுமைக்குக் காரணம் என்று பகிங்கிரமா[க]கவே குற்றஞ்சாட்டினார், சந்திரலேகா.

சந்திலேகாவின் பதவி விலகலை ஏற்[க] மறுத்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்ப[டி] மத்திய அரசைக் கோரியது. ஆனால் அ[து]வும் நிராகரிக்கப்பட்டது. திராவக வீ[ச்சு] வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டு[ம்] என்று மத்திய அரசிடம் நேரடியாகவே முறையிட்டு வருகிறார். ஆறுமாதமா[க] வழக்கு - விசாரனை நடத்தாது இருந்[த] ஜோயா கும்பல், சி.பி.ஐ விசாரனை வந்[து] விடுமே என அஞ்சி இப்போது அவ[சர] அவசரமாக குற்றப்பத்திரிக்கை தாக்க[ல்] செய்துள்ளது. மொத்தத்தில் ஜெயா கும்ப[ல்] ஆடிப்போயிருப்புது தெரிகிறது.

ஒரு பிரிவு பார்ப்பன கும்பலைத்தவி[ர] சு.சுவாமியை யோக்கியன் என்று யாரு[ம்] சொல்லமாட்டார்கள் சர்வதேச மாஃபிய கு[ம்]பல் மற்றும் காங்கிரசின் அரசியல் தரக[ர்]தான்; சி.ஏ."ஏஜெண்ட்" எனப் பலரு[ம்] கூறுவதும் ஏற்கக் கூடியதுதான். சந்திரலே[]காவும் சாதாரணமக்களை கடுமையா[க] ஒடுக்கிய அதிகாரத் திமிர் பிடித்தவர்தா[ன்]. நேற்றுவரை எம்.ஜி.ஆர்-ஜெயா கும்பலி[ன்] நெருங்கிய சிநேகிதியும் ஆலோசகரு[ம்] தான். ஆனால் இன்று அவருக்கு நேர்ந்[தி]ருக்கும் கொடூரம்! பாசிச ஜெயா கும்பலி[ன்] அதிகார - சுயநல வெறி, வக்கிரம், குரூ[ர] இன்பம் காணும் (சாடிச) தன்மைகளும் ப[ழி] வாங்கும் நடவடிக்கைகளும் மிகப் பெரி[ய] ஆபத்தாக, தமிழக மக்களின் முதல் அர[சி]யல் எதிரியாக அது விளங்குகிறது என்[ப]தற்கு சந்திரலேகாவின் விகாரப்பட்[ட] முகமே சாட்சியாக உள்ளது. ● ஆர்.கே



படிப்பகம்

www.padippakam.com

# அவதூறு வழக்கு 'ஜெ'யின் புது ஆயுதம்

**சட்டமன்ற அமைப்பின் கீழ் இவ்வளவு கேடுகெட்ட ஆட்சி வேறு எதுவும் இருக்கமுடியாது என்பதை ஜெயா கும்பல் மிகக் குறுகிய காலத்திலேயே நிலைநாட்டிவிட்டது. "என்னை யாரும் அசைக்க முடியாது" என்ற திமிரோடு பதவிபோதை தலைக்கேறி, கள்ளும் சாராயமும் கலந்து குடித்த குரங்கைப் போல அராஜக ஆட்டம் போடுகிறது.**

ஜெயா கும்பலை எதிர்க்கும் விமர்சிக்கும் கட்சிகளோ, பத்திரிகைகளோ இருக்கக்கூடாது; அடக்கி, ஒடுக்கி ஒழித்துவிட வேண்டும் என்பதில் இந்த அரசு தீவிரமாக உள்ளது. ஜெயா கும்பலின் அதிகார முறைகேடுகள், ஊழல் கொள்ளை, கிரிமினல் குற்றங்கள் காரணமாக மேலும் மேலும் அம்பலப்பட்டு மக்கள் வெறுப்பு அதிகரித்து வருவதால், இத்தகைய ஒடுக்குமுறைகளின் மூலம் அதைச் சரிகட்ட முயலுகிறது. அண்மைக் காலமாக தமிழக அரசுத் தலைமைச் செயலர் டி.வி. வெங்கட்ராமனுக்கு அரசுப் பணிகளை விட, எதிர்த் தரப்பினர் மீது அவதூறு வழக்கு தொடுப்பதே அன்றாட வேலையாகிவிட்டது. இன்று யார் மீது ஜெயா கும்பல் அவதூறு வழக்கு தொடுத்துள்ளது எவ்பதே செய்தித்தாட்களின் முக்கிய செய்தியாகிவிட்டது. ஒன்றல்ல, இரண்டல்ல; ஆட்சிக்கு வந்த 15 மாதங்களில் மொத்தம் 44 அவதூறு வழக்குகள்!

தி.மு.க. தலைவர் கருணாநிதி, அவரது உறவினர்கள், மேடைப் பேச்சாளர்கள், தி.மு.க. ஆதரவு நாளேடுகள், பத்திரிகைகள் மட்டுமல்ல; ஜெயாவின் ஊழலையும் அதிகார முறைகேடுகளையும் விமர்சித்து எழுதும் தமிழக பத்திரிகைகள் மீதும் பிற மாநில ஆங்கிலப் பத்திரிகைகள் மீதும் அடுக்கடுக்காக அவதூறு வழக்குகள் போடப்பட்டுள்ளன. ஆதாரமில்லாத பொய்யான குற்றச்சாட்டுக்களைக் கூறி, முதல்வர் மீதும் அவரது அரசு மீதும் களங்கம் கற்பித்து, மக்கள் மத்தியில் அரசியல் உள்நோக்கத்தோடு குழப்பம் விளைவிக்கிறார்கள் என்று ஜெயா சார்பில் இத்தகைய கிரிமினல் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. இதிலே தி.மு.க. மேடைப் பேச்சாளர் வெற்றி கொண்டான் மீது மட்டும் 8 வழக்குகள்!

இதுவும் போதாதென்று, ஜெயாவின் அருளைப் பெறுவதற்காக அவரது கொத்தடிமை மந்திரிகள் தம்பங்குக்கு எதிர்த்தரப்பினர் மீது அவதூறு வழக்குகளைத் தொடுத்துள்ளனர். அரசு உயரதிகாரிகளும் போலீசு உயரதிகாரிகளும் தனியாக வழக்குகளைப் போட்டுள்ளனர். இது தவிர தடா-தடை அரசி ஜெயாவின் பங்காளியும், தமிழ் அரசி பத்திரிகையின் ஆசிரியருமான (சசிகலா) நடராஜன் தி.மு.க. தலைவர்கள் மீதும் முரசொலி நாளேட்டின் மீதும் அவதூறு வழக்குப் போட்டுள்ளனர்.


அண்மைக்காலமாக அரசியல் தரகர் சுப்பிரமணியசாமியார் ஆட்சிக் கவிழ்ப்பு சகுனித்தனங்களை பத்திரிகைகள் பரபரப்பாக வெளியிட்டு ஜெயா கும்பலை அச்சுறுத்தி வருகின்றன. இதனால் பீதியில் உறைந்து போயுள்ள ஜெயா கும்பல் இப்போது பத்திரிகைள் மீது பாய்ந்து, கருத்துச் சுதந்திரத்திற்கே கல்லறை கட்டக் கிளம்பியுள்ளது.

கடந்த நடம்பர் 9-ந் தேதியன்று, சு.சாமியின் பேட்டிகள் - அறிக்கைகளை வெளியிடும் பத்திரிகைள் மீது கிரிமினல் - அவதூறு வழக்கு தொடரப்படும் என்று அரசு தலைமைச் செயலர் எச்சரித்துள்ளார். இதன்படி பத்திரிகை ஆசிரியர், வெளியிடுபவர், அச்சிடுபவர் ஆகியோரை 2 ஆண்டுகளுக்குச் சிறையிலடைத்து அபராதமும் விதிக்க முடியும். இப்பாசிச உத்தரவின் மூலம், செய்திகளைப் பிரசுரிப்பதைத் தடுக்குமு அவசரநிலைக்கால முன்தணிக்கை முறையை ஜெயா கும்பல் கொண்டு வந்துள்ளது. இந்த உத்திரவை மீறியதற்காக, சு.சாமியின் மீதும் அவரது பேட்டியை வெளியிட்ட மாலைமுரசு நாளேட்டின் மீதும் அவதூறு வழக்கு தொடுத்துள்ளது.

அடுக்கடுக்காய் தொடுக்கப்பட்டுள்ள இந்த வழக்குகள் ஓரிரண்டு வாய்தாக்களில் விசாரணை நடந்து முடிவுக்க வருகிற விவகாரமல்ல; போதுமான அளவுக்கு நீதிபதிகள் இன்றி ஆண்டுக் கணக்கில் வழக்குகள் தேங்கிக் கிடக்கும்போது, இந்த வழக்குகள் ஜெயா பதவியில் இருக்கும் வரை முடிவேயில்லாமல் நீடித்துக் கொண்டேபோகும். கோர்ட், வழக்கு, வக்கீல் என்று அலைந்து எதிர்த்தரப்பினரின் அரசியல் வாழ்க்கையே முடங்கிப்போகும்.

மேலும், முதல்வர் என்ற முறையில் அரசு வக்கீலைக் கொண்டு ஜெயா வாதிட முடியும். அல்லது விசுவாச வக்கீல்களை அரசு சார்பில் கூலிக்கு அமர்த்திக் கொள்ளவும் முடியும். வழக்கு தொடுத்த ஜெயா, பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி சாட்சியளிக்கக்கூட கோர்ட்டுக்கு வராமல் போகலாம். ஆனால், அரசியல் கட்சித் தலைவர்கள், மேடைப் பேச்சாளர்கள், பத்திரிகையாளர்களின் நிலைமையோ வேறானது. வாய்தா வரும்போதெல்லாம் வக்கீலை அமர்த்திக் கொண்டு சென்னைக்கு ஓடி வர வேண்டும். வழக்கு விசாரணைக்கு வரும்போது கோர்ட்டில் அவர் ஆஜராகாவிட்டால் கோர்ட்டை அவமதித்ததாக குற்றம் சாட்டிகைது செய்யவும் முடியும். வெற்றி கொண்டான் போன்றவர்கள் வெளியூர் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாமல் சென்னையிலேயே முடங்கிக் கிடக்க நேரிடும். எதிர்க் கட்சித் தலைவர் எந்தவொரு அரசியல் இயக்க நடவடிக்கைகளிலும் பங்கேற்கவோ வழிகாட்டவோ முடியாமல் போகும். இதன்மூலம் எதிர்த்தரப்பினரை முடமாக்கி அடக்கிவிடலாம் என்கிற நோக்கத்தோடுதான் இத்தகைய அவதூறு வழக்குகளை ஜெயா கும்பல் நரித்தனமாக தொடுத்துள்ளது.

'சமுதாய நலன்' கருதி எதை வெளியிட வேண்டும் எதை வெளியிடக் கூடாது என்று தீர்மானிக்க வேண்டியவர்கள் பத்திரிகை ஆசிரியர்கள்தான். இந்த விவகாரத்




படிப்பகம்

www.padippakam.com

தில் பத்திரிகைகளுக்கு உத்தரவிட அரசுக்கு அதிகாரம் கிடையாது. மேலும், மதல்தோற்றத்திலேயே (Prima Facie) ஆதாரங்களோ, அறிகுறிகளோ இல்லாத இத்தகைய அற்பத்தனமான வழக்குகளை, விதிகளின்படி நீதித்துறை ஏற்றுக் கொள்ளவே கூடாது. ஆனாலும் நீதித்துறையும் அதிகார வர்க்கமும் சட்டத்துக்கே எதிரான வகையில் ஜெயா கும்பலின் ஆணவத்திமிருக்கு வெண்சாமரம் வீசுகின்றன.

அவதூறு செய்த குற்றத்துக்காக வழக்கு தொடுப்பதென்றால் முதல் குற்றவாளிகள் அ.தி.மு.க. பேச்சாளர்களும், பார்ப்பன ''தினமலர்'' நாளேடும்தான். கவிநிலவு தர்மராஜ் போன்ற பேச்சாளர்கள் வாயைத் திறந்தாலே ஆபாசமும் அவதூறும் சாக்கடையாய் பெருகி ஓடுகிறது. எல்லாவற்றையும்விட பாசிச ஜெயலலிதாவே ஒரு அவதூறு பேர்வழி. தி.மு.க. வினர் என் கார்மீது லாரியை ஏற்றிக் கொல்ல முயன்றார்கள், கோயில் பிரசாதத்தில் என்னைக் கொல்ல நச்சு வைத்தார்கள், என் சேலையை உருவி மானபங்கப்படுத்தினார்கள்; என்னைக் கொல்ல புலிகள் தற்கொலைப் படை வந்துள்ளது என்றெல்லாம் புரளி கிளப்பி அவதூறு செய்வதே ஜெயாவின் அரசியலாக உள்ளது. இவையனைத்தும் பொய்யென நிருபணமான போதிலும் இன்னமும் அதே பாணியில் எதிர்த்தரப்பினர்மீது அவதூறுகளை அள்ளிவீசி வருகிறது ஜெயா கும்பல்.

''விலைவாசி ஏறிவிட்டதே! என்ன ஆட்சி இது!'' என்று பொதுமக்கள் யாராவது இனி வேதனையோடு புலம்பினால் கூட, அது அரசையும் முதல்வரையும் அவமானப்படுத்தும் செயல் என்று அவதூறு வழக்கு போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. என்னவானாலும் என்னை யாரும் அசைக்க முடியாது என்று திமிரோடு அராஜக ஆட்டம் போடும் பசிச ஜெயா கும்பலுக்கு, தன்மானமுள்ள தமிழக மக்கள் அதற்கு புரியும் மொழியில் பாடம் புகட்ட வேண்டும்.

### அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகர்களே!**

கடந்த 16-31 நவம் '92 இதழை வெளியிட இயலாததால் இரு இதழையும் சேர்த்து வெளியிட்டுள்ளோம். முறையாக உரியதேதியில் இதழை வெளியிடுவதற்குரிய ஏற்பாடுகளை செய்ததால் இத்தாமதம் நிகழ்ந்துவிட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர் குழு.

### அட்டைப்பட விளக்கம்

டெல்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சில் கூட்டத்தில் பாரதீய ஜனதா - விசுவ இந்து பரிசத்தின் கரசேவையை மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்;நீதிமன்றத் தீர்வுக்கு விடக்கூடாது என்று ஜெயலலிதா இந்து மதவெறிக் கருத்தை ஆதரித்துப் பேசினார்.

## முஸ்லிம்கள் படுகொலை:

# இனவிடுதலைக்கு எதிராக புலிகளின் சீர்குலைவு!

இலங்கையில் கடந்த அக்டோபர் 15-ம் நாளன்று புலனருவா மாவட்டத்தில் அப்பாவி முஸ்லிம்களைத் தாக்கி 200 பேரைக் கொன்றொழித்ததன் மூலம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தம்மைப் பாசிசக் காட்டுமிராண்டிகளின் கூட்டம் என்பதை மீண்டும் நிரூபித்துக் கொண்டுள்ளது. சிறுபான்மை சமூகத்தினரை அழித்தொழித்து ''இனத்தூய்மை'' படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டு, ஈழ விடுதலைக்கே எதிரான திசையில் அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் மட்டக்களப்பு அருகிலுள்ளது புலனருவா மாவட்டம். இங்குள்ள அக்போபுரா எனும் கிராமம் சிங்களர்களையும் தமிழ் பேசும் முஸ்லீம்களையும் கொண்டது. பல்லியகோடெல்லா, பரம்புரானா, அகமத்புரம் ஆகிய கிராமங்கள் முழுமையாக முஸ்லிம்களைக் கொண்டது. கடந்த அக்.15-ந் தேதியன்று அதிகாலையில், புலிகளின் புதிதாக நிறுவப்பட்டுள்ள மகளிர் படையும், இளைஞர் குழுவும் இக்கிராமங்களைச் சுற்றி வளைத்து தாக்கத் தொடங்கியது. வீடு வீடாக கதவைச் சுட்டுத் தகர்த்து உள்ளே புகுந்த புலிகள், தூங்கிக் கொண்டிருந்த அப்பாவி மக்களை கண்மூடித்தனமாகச் சுட்டுத் தள்ளினர். தப்பியோடியவர்களைப் பிடித்து கோடாரியால் கண்டதுண்டமாக வெட்டி தெருவில் வீசினர். உயிருக்கு அஞ்சி அருகிலுள்ள மசூதி ஒன்றினுள் தஞ்சம் புகுந்தவர்களைக்கூட ஈவிரக்கமின்றி சுட்டுத் தள்ளினர்.

இரண்டு மணி நேரத்துக்குள் இந்நான்கு கிராமங்களும் மிகக் கோரமான போர்க்களம் போல் காட்சி அளித்தன. துண்டிக்கப்பட்ட கை-கால்களும் தலை சீவப்பட்ட முண்டங்களும் தெருவில் கிடந்து துடித்தன. தகவல் அறிந்து இலங்கை ராணுவத்தின் ஹெலிகாப்டர்கள் நெருங்கிய போது, புலிகள் அவற்றை நோக்கிச் சுட்டபடியே தப்பியோடினர். திட்டமிட்டபடி 4 கிராம மக்களையும் கொன்று குவிக்க முடியாத ஆத்திரத்தில் எஞ்சியிருந்த வீடுகளை வெளிப்புறம் பூட்டி பெட்ரோல் ஊற்றித் தீ வைத்தனர்.

**இவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? — புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட அப்பாவி முஸ்லிம்கள்.**





படிப்பகம்

www.padippakam.com


புலிகளின் இக்காட்டுமிராண்டித்தன மான தாக்குதலில் 200-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதிலே கொடுமை என்னவென்றால், கொல்லப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் பெண்களும் குழந்தைகளும் முதியவர்களுமாவர். அதிலும் 6 முதல் 13 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மட்டும் 35 பேர்!

முஸ்லிம் சிவிலியன்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதல் இப்போது முதன்முறையாக நடப்பது அல்ல. கடந்த 1990-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் 'இரண்டாவது ஈழப் போர்' என்ற பெயரில் சிங்கள அரச படைகளுக்கு எதிராகப் புலிகள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியதிலிருந்து இத்தகைய தாக்குதல்கள் தொடர்கின்றன. வடக்கு மாகாணத்தில் திடீரென நாள் குறித்து எச்சரிக்கை கொடுத்து, யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளிலிருந்து — தாம் பிறந்து வளர்ந்த மண்ணிலிருந்து முஸ்லிம்கள் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டனர். 1990-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டம் கட்டான்குடியில் புலிகள் நடத்திய தாக்குதலில் 140 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அடுத்த வாரமே அருகிலுள்ள எரவூரில் 122 முஸ்லிம்களைப் புலிகள் கொன்றொழித்தனர். அதன் பிறகு கடந்த ஈராண்டுகளில் சிறியதும் பெரியதுமாக நடந்த கணக்கற்ற தாக்குதல்களில் ஏறத்தாழ 2,000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈழத் தமிழர்களில் தமிழ் பேசும் முஸ்லிம்கள் தேசிய இனச் சிறுபான்மையினராவர். "மூர்" எனும் பழங்குடி வம்சாவழியைச் சேர்ந்த அவர்களது பண்பாடு ஈழத் தமிழினத்திலிருந்து வேறுபட்டதாகும். தமிழ் மக்களைப் போலவே, சிங்கள இனவெறி பயங்கரவாத அடக்குமுறையால் முஸ்லிம்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான முரண்பாடு இன்னமும் தீராத பிரச்சினையாகவே நீடிக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு, இவ்விரு இனங்களுக்கிடையே மோதலைத் தூண்டிவிட்டு சிங்கள இன வெறியர்கள் குளிர்காய்ந்து வருகின்றனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை, ஈழத் தமிழினத்துக்கும் தமக்குமிடையே பல்வேறு முரண்பாடுகள், கசப்புணர்ச்சிகள் இருந்த போதிலும், இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு எதிரான நீதியான யுத்தத்தில் புலிகளுடன் ஐக்கியப்பட்டு நின்றனர். 1988-ல் புலிகளும் முஸ்லிம் தலைவர்களும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையே இதற்கு சாட்சி. பின்னர் துரோக ஒப்பந்தம் திணிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாணத் தேர்தல்கள் நடந்தபோது, தமிழீழத்தில் முஸ்லிம்களுக்கு 30% பிரதிநிதித்துவம் தருவதாக ஒப்புதல் அளித்து இம் மோசடித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு முஸ்லிம்களுக்குப் புலிகள் அறைகூவல் விடுத்தனர். இத்தேர்தலில் முஸ்லிம் தலைவர்கள் சந்தர்ப்பவாதமாக பங்கேற்றபோதிலும், "புலிகளின் உரிமைகளைப் பாதிக்காத வகையில் நாம் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவோம்; என்றே கூறினர். (18.10.'88 வீரகேசரி) ஆனாலும் புலிகளின் பாசிசத் தன்மையாலும், மக்கள் மத்தியிலான முரண்பாட்டைச் சரியாகக் கையாளத் தவறியதாலும், முஸ்லிம் தலைவர்களின் சந்தர்ப்பவாதத்தாலும் இந்தச் சாதகமான நிலைமை முறிந்து போனது.

"முஸ்லிம் காங்கிரசுக் கட்சி, ஆளும் யு.என்.பி. இனவெறிக் கட்சியின் கூட்டாளியாகிவிட்டது. தமிழ் பேசும் முஸ்லிம் கிராமங்களில் சிங்கள குடியேற்றத்துக்கு அனுமதித்து வருகிறது. தற்போது வடக்கு - கிழக்கு மாகாண அமைதித் தீர்வுக்காக மூனேசிங்கே தலைமையிலான பாராளுமன்றக் குழுவில் ஈழத்துரோகிகளுடன் சேர்ந்து பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. எனவே இத்தகைய நடவடிக்கைகளின் மூலம்தான் துரோகிகளாகிவிட்ட முஸ்லிம் காங்கிரசுக்குப் பாடம் புகட்ட முடியும்" என்பது புலி ஆதரவாளர்கள் இக்கொலை வெறியாட்டத்தை நியாயப்படுத்தவும் செய்கின்றனர்.




சிங்கள குடியேற்றத்தால் பாதிக்கப்படுவது தமிழின மக்கள் மட்டுமல்ல; இதனால் முஸ்லிம்கள் மேலும் சிறுபான்மையாகி வருகிறார்கள் என்ற உண்மையையும், ஒருசில முஸ்லிம் தலைவர்களின் துரோகத்தால் ஒட்டுமொத்தமாக முஸ்லிம் இனமே பாதிக்கப்படுவதையும் அம்பலப்படுத்தி இன்றுவரை புலிகள் எந்தவொரு பிரச்சார இயக்கத்தையும் மேற்கொண்டதில்லை. முஸ்லிம் தலைவர்களின் துரோகத்தனத்தால் அதிருப்தியுற்றுள்ள முற்போக்கான முஸ்லிம் இளைஞர்களையும் வென்றெடுக்க புலிகள் முயற்சிக்கவில்லை. மாறாக, முஸ்லிம்களையே தமது எதிரிகளாகப் பாவித்து தாக்கத் தொடங்கினர். தலைவர்களின் துரோகத்துக்கு, அப்பாவி சிவிலியன்களைப் பழிவாங்குவது எந்த வகையிலும் நீதியான யுத்தமாகாது.

மேலும், வடக்கு மாகாணத்தை இலங்கையின் முப்படைகளும் சேர்ந்து தாக்கும்போது, எதிரியின் பலத்தை சிதறடிக்க மற்றொரு பகுதியில் திடீர் தாக்குதல் நடத்துவதென்பது கொரில்லாப் போர்முறையின் ஓர் அங்கம் என்று இப்படுகொலை புலி ஆதரவாளர்களால் நியாயப்படுத்தப்படுகிறது. எதிரியின் பலத்தை சிதறடிக்க மற்றொரு பகுதியில், இராணுவ இலக்குகள் மீது திடீர் தாக்கதல் நடத்துவதுதான் நீதியான மக்கள் யுத்தமாக கருத முடியும்; மாறாக, சிவிலியன்களை அழித்தொழிப்பதை 'மக்கள் யுத்தம்' ஒருபோதும் அங்கீகரித்ததில்லை.

தேசிய இனச் சிறுபான்மையினரான முஸ்லிம்களை ஐக்கியப்படுத்துவது மட்டுமின்றி, சிங்கள இனத்திலேயே கூட இடைநிலைச் சக்திகளை வென்றெடுப்பதை நோக்கமாகக் கொண்டு ஈழவிடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். ஆனால், புலிகளோ, சக போராளிகளையே பாசிச முறையில் கொன்றொழிப்பதோடு சிறுபான்மையினரான முஸ்லிம்களை அழித்தொழித்து தேச விடுதலைப் போராட்டத்துக்கே வகுப்புவாதச் சாயம் பூசி திசை திருப்பி வருகின்றனர்.

ஈழ விடுதலைக்கு எதிரான புலிகளின் இத்தகைய பாசிச உத்தியானது, முஸ்லிம் மக்களை ஈழ விடுதலைப் போராட்டத்திலிருந்து மேலும் மேலும் விலக்கித் தள்ளுவதோடு அவர்களை சிங்கள அரச பயங்கரவாதிகளின் பக்கம் சேருவதைத் தீவிரப்படுத்திவிட்டது. புலனருவா படுகொலைக்குப் பிறகு, புலிகளை ஒடுக்க இலங்கை ராணுவத்தில் முஸ்லிம்களுக்குத் தனிப்பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்றும் முஸ்லிம்கள் தம்மை தற்காத்துக் கொள்ள ஆயுதம் வழங்குமாறும் முஸ்லிம் காங்கிரசுக் கட்சி கோருமளவுக்கு நிலைமை முற்றியுள்ளது.

இந்தியாவின் ஆக்கிரமிப்பு, இந்தியக் கைக்கூலி குழுக்களின் துரோகம், சிங்கள அரச பயங்கரவாத அடக்குமுறை ஆகியவற்றை முறியடித்து சுயநிர்ணய உரிமைப் போரில் உறுதியாக நிற்கும் ஈழ மக்கள், ஈழ விடுதலைக்கே எதிரான புலிகளின் பாசிசத்தை ஒருக்காலும் அங்கீகரிக்க முடியாது. எவ்வளவு துயரங்கள், இழப்புகள் நேரிடினும் புலிகளின் பாசிசத்துக்கு எதிராக சிறுபான்மையினரான முஸ்லிம்களைப் பாதுகாப்பது உட்பட அரசியல் - ஜனநாயக உரிமைகளுக்கான அமைப்புகளையும் இயக்கங்களையும் கட்டியமைப்பது ஈழ மக்களின் இன்றைய உடனடிக் கடமையாகிறது. இல்லையெனில் இவ்வளவு காலமும் அவர்கள் சிந்திய ரத்தம் வீணாகிப் போகும். நீண்ட இருண்ட எதிர்காலத்தையே சந்திக்க நேரிடும்.

● குமார்

படிப்பகம்

www.padippakam.com



தஞ்சை கொள்முதல் நிலையங்களில் நாட்கணக்கில் தவம் கிடக்கும் லாரிகள்; அரசின் அலட்சியம்.

# விளைச்சல் கண்டும் வேதனை தீரவில்லை!

வைகாசி மாதம் பிறந்ததுமே மேட்டூர் நீர்மட்டத்தை கவனிக்கத் தொடங்குவர் காவிரி டெல்டா விவசாயிகள். மேட்டூர் அணை வழக்கமான தேதியான ஜூன் 12-ல் திறந்து விடப்படுமா, குறுவை போகம் செய்ய முடியுமா, காலதாமதமானால் ஐப்பசி அடைமழையில் அறுவடை பாழாகுமே என்ற கவலையோடு வயலுக்கு எரு அடித்து காத்திருப்பார்கள். காவிரி நீரில் தமிழகத்தின் உரிமை மற்றும் தேவை புறக்கணிக்கப்படுவதால் அஞ்சி அஞ்சி விவசாயம் செய்ய வேண்டிய நிலை. ஆனால், இந்த வருடம் வழக்கமான தேதியில் பாசனத்திற்கு நீர் திறந்து விடப்பட்டது. முறை வைத்த பாசனம் அடிக்கடி பெய்த மழையாலும், பின்னர் மேட்டூர் அணையில் நீர் அதிகரிப்பாலும் கைவிடப்பட்டு டெல்டா பாசனத்தின் அனைத்து இடங்களுக்கும் நீர் விடப்பட்டது. கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவில், 4 லட்சம் ஏக்கர்களுக்கும் மேலான குறுவை போகம் என்பது இவ்வாண்டில் இயற்கை அளித்த திடீர் பரிசு என்றே கூற வேண்டும்.

இதனால் இவ்வாண்டு குறுவை அமோகமாக விளைந்தது. ஏக்கருக்கு 35 மூட்டைகள் சராசரியாகக் கிடைத்துள்ளது. தஞ்சை - நாகை மாவட்டங்களில் மொத்தம் 10 லட்சம் டன்னுக்கும் அதிகமாக விளைச்சல் கண்டுள்ளது. ஆனால், இவ்வளவு நல்ல விளைச்சலைக் கண்டும் விவசாயிகள் மகிழ்ச்சியடைய முடியவில்லை. அவர்களது கனவுகளும் நிறைவேறவில்லை. அக்டோபர் தொடக்கத்தில் அறுவடை தொடங்கியதுமே, இம்மாவட்டங்களில் அரசின் ஏகபோக கொள்முதலும் தொடங்கியது.

ஆனால், அக்டோபர் 20 வாக்கில் அரசு கொள்முதலை மந்தப்படுத்தியது; சில இடங்களில் நிறுத்தியது.

விவசாயிகளுக்கோ இது ஒரு பேரிடியாகும். அவர்கள் இந்த குறுவை நெல்லை படாதபாடு பட்டு விளைவித்தனர். ஒன்றுக்கு இரண்டாக விலை கொடுத்து உரம் வாங்கிப் போட்டனர்; மருந்தடித்தனர்; விலைவாசி ஏற்றத்தால் கடுமையான பண நெருக்கடிக்கு ஆளாகினர்; முக்கால் அடிச் சேற்றில் நின்று அறுத்து, வயலில் அடிக் காய்ச்சல் மற்றும் களம்போட முடியாமல் கிடைத்த இடங்களில் எல்லாம் தாள் அடித்து நெல்லாக்கினர். கிடைத்ததை உடனே விற்கவேண்டிய நிர்ப்பந்தம், குறிப்பாக கூலி, ஏழைவிவசாயிகளுக்கு உள்ளது. வாங்கிய கடனை அடைத்தால்தான் அடுத்த கடன் வாங்க முடியும். அடுத்து சம்பா போகத்து உழவு, நடவு, உரச் செலவுகளோ அச்சுறுத்துகின்றன. மழைக்காலத்தில் நெல்லை பாதுகாக்கும் அளவு இடவசதி இல்லாத நிலையில் உள்ளனர், குறுவை நெல்லை சாப்பாட்டுக்காக அதிகம் சேமிப்பதில்லை. எனவேதான் விளைச்சலில் கணிசமான பகுதி உடனடியாக விற்பனைக்கு வருகிறது. இம்மாவட்டங்களில் தனியாருக்கு விற்க வேண்டும் என்றால் ரூ. 50 வரை மூட்டைக்கு விலை குறைத்து விற்க வேண்டும்.

அரசின் கிட்டதட்ட 500 நேரடி கொள்முதல் நிலையங்கள் ரூ. 120 கோடிக்கு 4 லட்சம் டன் நெல் மட்டுமே அக்டோபர் இறுதிக்குள் கொள்முதல் செய்திருந்தன. இந்த அளவு மட்டுமே கொள்முதல் செய்வது என அரசு இலக்கு வைத்திருந்தது — அதற்கு மட்டுமே தயாராக இருந்ததுதான் பிரச்சினையின் மையமாகும்.

10 லட்சம் டன் விளையும், எப்படியும் திட்டமிட்டதற்கு மேலாக இன்னொரு மடங்கு கொள்முதல் செய்ய வேண்டும் என அறிந்தும் எவ்வித முன்னேற்பாடுகளும் அரசு செய்யவில்லை. கூடுதலாக கொள்முதல் செய்யுமா என்ற உத்திரவாதத்தையும் அளிக்கவில்லை.

சாக்கு ஒன்றுக்கு - ரூ.8/- உறுதித் தொகை அளித்தால் சாக்குகள் தருவதாக அறிவித்த அரசு போதுமான சாக்குகளைத் தரவில்லை. லாரிகள் ஏற்பாட்டில் அரசு பின்பற்றும் நடைமுறையால் நெல்மூட்டைகளின் போக்குவரத்து சீர்குலைந்தது. லாரிகளிலிருந்து மூட்டைக்களை இறக்கி வைக்கவும், பாதுகாத்து வைக்கவும் தக்க முன்னேற்பாடுகள் இன்றி 24 மணி நேரத்திற்கும் மேலாக லாரிகள் சேமிப்பு மையங்களில் காத்து நின்றன. போதிய ரயில்வே வேகன்கள் இல்லாமல் குட் செட்டுகளில் லாரிகள் காத்து நின்றன. சேமிப்பு கிடங்குகளுக்கோ ஏற்பாடு செய்ய அரசு தவறியது. நேரடிக் கொள்முதல் நிலையங்களோ குழப்பத்தின் மையமாகத் திகழ்ந்தன. சுற்றிலும் மூட்டைகள்; ஒருபுறம் கொள்முதலானவை, மறுபுறம் கொள்முதலுக்கு வந்திருப்பவை. கொள்முதலுக்கு ஏற்றுக்கொள்ள டோக்கன் பெற்றவர்கள் நாட்கணக்கில் காத்திருந்தனர். புதியவர்களுக்கோ டோக்கனும் தரப்படவில்லை.

உரிய அளவு பணம் ஒதுக்குமாறும், சாக்குகளுக்கும் லாரிகளுக்கும் ஏற்பாடு செய்யுமாறும், கொண்டு வரப்பட்ட அனைத்து நெல்லையும் எல்லா இடங்களிலும் கொள்முதல் செய்யுமாறும் மத்திய, மாநில அரசுகளுக்கு விவசாயிகள் கோரிக்கைகள் அனுப்பினர். சில இடங்களில் போக்குவரத்து மறியல் என போராட்டங்களிலும் இறங்கினர். அபாய நிலையை உணர்ந்து அக்டோபர் இறுதியில் தஞ்சைக்கு மாநில உணவு அமைச்சர் ஜி.விசுவநாதன் வந்தார். அமைச்சரும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கூடுதல் லாரிகளுக்கும் ரயில்வே வேகன்களுக்கும் ஆணையிட்டிருப்பதாக வாக்குறுதிகள் அளித்தனர். ஆனால், கொள்முதல் ஏற்பாட்டில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

விளைச்சலைப் பெருக்குவீர் என்று அன்றாடம் அறைகூவும் அதிகார வர்க்கமோ, விளைந்த நெல்லை வாங்கிக் கொள்ளச் சொன்னால், சொரணையே இல்லாமல் எருமைமாடாக நடந்து கொள்கிறது. காவிரியில் நீர் வரச் செய்ததாக பீற்றிக் கொள்ளும் ஜெயா கும்பலோ காவிரி டெல்டா விவசாயிகளை காலைவாரிவிட்டது. உணவு தானிய சேமிப்பைக் குறைக்கவும், பொது விநியோகத்தில் அத்தியாவசியப் பொருட்களைத் தருவதை குறைக்கவும் உலக வங்கி ஆணையிடுகிறது. அடிப்பற்றிச் செல்லும் மத்திய, மாநில அரசுகள் அமோக விளைச்சல் இருந்தும் விவசாயிகளை நாசமாக்கி வருகின்றன.

● மணி



படிப்பகம்

www.padippakam.com




● தங்களது இயக்கத் தோழர்களையும், தோழமை அமைப்புத் தோழர்களையும் போலீஸ் அதிகாரிகள் சாதி பெயரைச்சொல்லி விமர்சித்தால் உடனே கண்டன சுவரொட்டி ஒட்டுகிறீர்கள். ஆனால் "தனி மனிதர்" ஜெயலலிதா செய்யும் பாசிச சர்வாதிகாரத்தை குறித்து பேசும் போதும் "பார்ப்பன ஜெயலலிதா" என்று சாதியைக் குறிப்பிட்டு எழுதியும், பேசியும்,வருகிறீர்கள். தங்களது புதிய கலாசாரம், புதிய ஜனநாயகம் போன்றவற்றை கடந்த 5 ஆண்டுகளாக வாங்கிப் படித்து வரும் என்னைப் போன்ற தங்களது அரசியல் விமர்சன ஆதரவாளர்களுக்கு வருத்தம் ஏற்படாதா? ஒரு குறிப்பிட்ட ஜாதியை சொன்னால் கண்டிப்பதும் மற்றொரு ஜாதி பெயரை போட்டு சுவரொட்டி ஒட்டுவதும், சாதிகள் கூடாது என்ற தங்களது கொள்கைக்கு முரணானது அல்லவா? இதற்கு உடனே விளக்கமாக பதிலுரைக்கவும்!

சுகுமார், திருச்சி.

☆ "கவுண்டரே", "முதலியாரே" "நாயக்கரே" "தேவரே" "பிள்ளைவாள்" "செட்டியாரே", "ஐயரே", "ஐயங்காரே" என்று சாதிப்பெயரைச் சொல்லி அழைத்தால் அவரோ, சமூகமோ, அதை இழிவாகக் கருதுவதில்லை. அதை அவர்கள் தாமே பெருமையாகக் கூறிக் கொள்கிறார்கள். சமீபகாலம் வரை அதைத் தமது பெயருடன் சேர்த்துக் கொண்டும் வந்தார்கள். அப்படிச் சேர்த்துக் கொள்வது சில பார்ப்பனர்களிடையே புதுப்பிக்கப்பட்டும் வருகிறது.

ஆனால் "பள்ளா", "பறையா", "சக்கிலியா", "வண்ணா", "குறவா" என்று கூப்பிட்டால் அது அவராலும், சமூகத்தாலும் இழிவாகவும், அவமானமாகவும், தாழ்வாகவும் ஏசுவதாகக் கருதப்படுகிறது. இந்த உண்மையை அங்கீகரிக்கும் வகையில்தான் குறிப்பிட்ட சில சாதிப் பெயர்களைச் சொல்லி அழைப்பதையும், ஏசுவதையும் எதிர்த்து தீண்டாமைத் தடுப்புச் சட்டம் போடப்பட்டுள்ளது. மற்ற சாதிகளுக்கு இச்சட்டம் பொருந்தாது.

எவரொருவர் தான் இந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்பட்டுக் கொள்கிறாரோ, மற்ற சில சாதிகளைத் தாழ்த்தி வைத்து இழிவுபடுத்தியும் ஏசியும் வருகிறாரோ அவரது சாதியைக் குறிப்பிட்டுச் சொல்வதில் தவறு ஒன்றும் இல்லை; அப்படி அவர் கருதுவதற்கு இடமும் இல்லை. ஆனால் "ஐயரே", "ஐயங்காரே" என்று அந்தச் சாதிகளின் பெயரைக் குறிப்பிடாமல் "பார்ப்பனர்" என்று குறிப்பிடுவது இழிவுபடுத்துவதாகாதா என்று கேட்கலாம்! மற்ற பிற சாதிகளை இழிவுபடுத்தும் பெயர் சூட்டி, அதைக் காத்துவரும் ஒரு சாதி தனக்குத்தானே பெருமை பாராட்டிக் கொண்டு தானே சூட்டிக்கொண்ட பெயரையே குறிப்பிட்டுக் அச்சாதிக்கு ஏன் பெருமை தரவேண்டும்? இதற்கு மாறாக அச்சாதியின் நடைமுறைக்கு கண்டனமும், வெறுப்பையும் வெளிப்படுத்துவதற்காகவே பார்ப்பனர் என்று குறிப்பிடுகிறோம்.

எவரொருவர் தான் இந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்று கூறிக் கொள்வதில்லையோ, அந்தச் சாதியில் வைத்துத் தம்மை அவமானத்துக்கும், அடிமைத்தனத்துக்கும் உள்ளாக்குவதாகக் கருதுகிறாரே, அவரது சாதிப்பெயரைச் சொல்லி அழைப்பதுதான் இழிவுபடுத்துவதாகும். ஆகவேதான் எங்களது இயக்கத் தோழர்களை போலிசு அதிகாரிகள் சாதிப் பெயரைச் சொல்லி ஏசுவதைக் (இச்சாதிப் பெயரைச் சொல்லுவது விமர்சிப்பது அல்ல தாக்குவதுதான்) கண்டித்து சுவரொட்டிகள் மூலம் அம்பலப்படுத்துகிறோம்.

"சாதிகள் கூடாது" என்கிறபோது சாதிய முறையையே, சாதிய அமைப்பையே ஒழித்துக் கட்டவேண்டும் என்கிற பொருளில்தான் நாம் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதைச்சாதிப்பதற்கு உள்ள வழி சாதிகளைப் பற்றியே பேசாமல் இருப்பதோ, எல்லா சாதிகளுக்கும் அப்பாற்பட்ட முறையில் "பொது நீதி" பேசி ஒதுங்கி இருப்பதோ அல்ல. இன்னின்ன சாதிகள் இந்தச் சாதிய அமைப்பு முறையினால் ஆதாயமும் ஆதிக்கமும் அடைவதால் அதைக் காத்து செயல்படுத்தி வருகின்றன. அவை எதிர்த்து முறியடிக்கப்பட வேண்டியவை. இன்னின்ன சாதிகள் இந்தச் சாதிய அமைப்பு முறையினால் பாதிக்கப்பட்டவை, ஒடுக்கப்பட்டவை, ஒன்றுதிரண்டு போராட வேண்டியவை என்பதை மக்களிடையே எடுத்துச் சொல்லத்தான் வேண்டும். ஆகவே சில சாதிப் பெயரைச் சொன்னால் கண்டித்து மற்றொரு சாதிப் பெயரைக் குறிப்பிட்டு சுவரொட்டி போடுவதும் முரணானதில்லை.

மேலும் ஜெயலலிதாவின் பாசிச சர்வாதிகாரம் ஒரு "தனி நபர்" தன்மை உடையது அல்ல. "இது நம்மவாள் ஆட்சிதான்" என்று தமிழ்நாடு பிராமணர் சங்கம் (தாம்பிராஸ்) பிரகடனப்படுத்தியது. "ஆமாம் நான் பாப்பாத்திதான்" என்று ஜெயலலிதாவே சட்டசபையிலேயே பெருமையடித்துக் கொண்டார். ஒருபுறம் காங்கிரசு, மறுபுறம் பாரதீய ஜனதா ஆகிய இரண்டு கட்சிகளின் பார்ப்பனர்களும், வானொலி, வானொளி - பத்திரிக்கைகளில் உள்ள பார்ப்பனர்களும், தொழிலதிபர் - வல்லுநர்கள் - அதிகாரிகள் - மடாதிபதிகள் எனப் பலதரப்பட்ட பார்ப்பனர்கள் அடங்கிய ஒரு பார்ப்பன - பாசிச கும்பலைத்தான் ஜெயலலிதா பிரதிநிதித்துவப் படுத்துகிறார். மேலும் தமிழ்நாட்டில் இன்றைய பார்ப்பன மீட்பு வாதத்தின் தலைவியாகவும் விளங்குகிறார். எனவே "பார்ப்பன ஜெயலலிதா" என்று குறிப்பிடுவதில் தவறில்லை.

● பீகாரில் சட்டம் - ஒழுங்கு மிகவும் கெட்டுவிட்டதாகவும் அங்கு மிகவும் பொருளாதார நெருக்கடியால் மக்கள் கொலை, களவு போன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும் செய்தித்தாள் மூலம் அறிந்தேன்; இது உண்மையா?

ஜெயப்பிரகாஷ், மேல்பள்ளிப்பட்டு

☆ சாதியக் கொலைகள், கலவரங்கள் நடப்பதுதான் பீகாரில் தொடர்ந்து அதிகரித்துவரும் கிரிமினல் குற்றங்களாகவும், இந்த வகையில் பீகார் முதன்மையானதாகவும் இருந்து வருகிறது. தனிநபர் கிரிமினல் குற்றங்களிலும், கிரிமினல் குற்றங்களையே தொழிலாகக் கொண்டு இயங்கும் மஃபியா கும்பல்களும், அவை அரசியலில் ஆதிக்கம் பெறுவதும் உ.பி, ம.பி போன்ற மாநிலங்கள், டெல்லி, பம்பாய் போன்ற நகரங்களைப் போலத்தான் பீகாரிலும் ஆரம்பம் முதலே அதிகமாக இருந்தது. குறிப்பாக பீகாரில் இந்நிலை தோன்றியதற்குக் காரணம் மற்ற மாநிலங்கள், நகரங்களைப்போல "திடீர் செல்வ" வளர்ச்சி அல்ல. நாட்டிலேயே அதிக அளவும் சிறப்பாகவும் இயற்கை வளமிருந்தும் நாட்டிலேயே மிகப் பின்தங்கிய ஏழ்மை நிலையில் அம்மாநிலம் வைக்கப்பட்டிருந்ததுதான். ஆனால் கடந்த சில ஆண்டுகளில் மஃபியா வகை கிரிமினல் குற்றங்களில் தமிழ்நாடு உட்பட பிறமாநிலங்கள் பீகாரை விஞ்சி வருகின்றன. பம்பாய், அகமதாபாத் போன்ற நகரங்களில் நடக்கும் இரகசிய உலக மஃபியா கும்பலின் பகிரங்கப் போர்களோடு (GANG WARS) ஒப்பிடும்போது பீகாரில் நடப்பது ஒன்றும் பெரிதல்ல. ஆனால் ஒருபுறம் பீகாரில் வளர்ந்துவரும் புரட்சிகர இயக்கங்கள், மறுபுறம் பீகாரை ஆளும் ஜனதாதள லல்லுப்பிரசாத் அரசாங்கம் ஆகிய இரண்டையும் இழிவுபடுத்தும் நோக்கத்தோடு காங்கிரசு, பாரதீய ஜனதா கட்சி, பார்ப்பன ஆதிக்கத்திலுள்ள பத்திரிக்கைகள், வானொளி - வானொலி முதலானவை பீகாரின் சட்டம் — ஒழுங்குப் பிரச்சினையை மட்டும் மிகைப்படுத்துகின்றன. ●

படிப்பகம்

 www.padippakam.com



# தேவை விரிந்த பார்வை

**1985-ல்** பல்வேறு பொருளாதார கோரிக்கைகளை முன் வைத்து ஆரம்பமான ஆசிரியர்களின் போராட்டம் — 1988-ல் 'மத்திய அரசு ஊழியருக்கு இணையான' ஊதியம் கோரி ஆசிரியர் - அரசு ஊழியர் இணைந்த போராட்டமாக ஒன்றரை மாத காலம் நீடித்தது — இன்றுவரை கால இடைவெளி விட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இடைப்பட்ட காலங்களில், அரசாங்கங்கள் மாறி இருப்பினும் கூட, ஆசிரியர்கள் கோரிக்கைகள் போராட்ட முழக்கங்களாக இன்னும் தெருவோரத்தில்தான்.

1989-ல் தி.மு.க. ஆட்சி காலத்தில் அமுலாக்கப்பட்ட ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலான ஊதிய விகிதங்கள், அநேக முரண்களைக் கொண்டுள்ளதை நீக்கச் சொல்லி, தற்சமயம் மேனிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் முதல் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் வரை போராட்டக் களத்தில் உள்ளனர்.

"1.6.88-ல் பணியிலுள்ள தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்களின் அடிப்படை சம்பள விகிதம் ரூ. 2,300/- ஆயின், அந்த தேதிக்குப் பிறகு இந்த பதவிக்கு உயர்வு பெறும் ஆசிரியர்களுக்கு, மேற்சொன்ன சம்பள விகிதத்தை நிர்ணயிக்க மறுக்கிறது அரசு; நான்காவது ஊதியக்குழு முடிய, ஒன்றாக இருந்த இடைநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் கல்வியியலில் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்களுக்குமான (B.T. Trained) சம்பள விகிதங்கள், தற்போது முரண்பட்டுள்ளன" என்கின்றன போராடும் சங்கங்கள். இது போன்று, உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களுக்கு, பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் இல்லாததால், அதே தகுதியில் தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பள விகிதங்களுடன் முரண்படுகின்றன.

இவை தவிர்த்து, பகுதி நேர ஆசிரியர்களை முழுநேர ஆசிரியர்களாக மாற்றக் கோருதல், தேர்வு நிலை / சிறப்பு நிலை பணிக்காலங்களை வரன்முறைப்படுத்துதல், அரசு நிதி உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியராக மாற்றுதல், பதவி உயர்வு மற்றும் பணிக்கால பண நலன்கள் முதலிய கோரிக்கைகளையும் ஆசிரியர்கள் அரசின் முன் வைத்துள்ளனர்.

சாலை மறியலில் ஈடுபட்ட முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கைகளை பரிசீலிக்க குழு ஒன்றை அமைக்கப் போவதாக உறுதி கொடுத்துள்ளது அரசு. மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் நான்கு அம்ச கோரிக்கைகளுக்காக மூன்று கட்ட போராட்டத்தை நடத்தி முடித்துள்ளனர். இடைநிலைப் பள்ளியாசிரியர்கள் தடையை மீறி மறியலில் ஈடுபட்டதற்காக சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஏழு சங்கங்கள் ஒருங்கிணைந்த பட்டதாரி மற்றும் தமிழாசிரியர்களின் கூட்டு நடவடிக்கை குழு, 28.10.92 முதல் 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. "சம்பள விகிதங்கள் முரண்படுவதுடன், மேனிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பகுதி நேர ஆசிரியர்களுக்கு கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, அவர்களின் பணிகளை வரன்முறைப்படுத்தாமலும், சம்பளம் வழங்காமலும் உள்ளது அரசு" என்கிறார் கூட்டு நடவடிக்கை குழு நிர்வாகிகளுள் ஒருவர்.

"அ.தி.மு.க. கட்சி தனது தேர்தல் அறிக்கையில் ஆசிரியர்களின் சம்பள விகிதங்களில் காணப்படும் முரண்களைக் களைவதாக ஏற்றுக் கொண்டுள்ளது; ஆயினும், இது விசயமாக, அக் கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான ஜெயலலிதா, நாங்கள் கடந்த இரண்டு வாரத்துக்கும் மேலாக போராடிக் கொண்டிருக்கும் போதுகூட எந்தஒரு முடிவும் அறிவிக்காமல் உள்ளார்" என்கிறது கூட்டு நடவடிக்கை குழுவின் தலைமை. "தி.மு.க. காலத்தில் அமைக்கப்பட்ட ஊதிய முரண்பாடுகளைக் களைவதற்கான குழுவும், அரசின் செல்லப் பிள்ளைகளான காவல்துறைக்கும், வருவாய் துறைக்கும் மட்டுமே ஊதிய விகிதங்களை மாற்றியமைத்தது" என்கிறார் மற்றொரு ஆசிரியர்.

ஊதிய, பணிக்கால மற்றும் பதவி உயர்வு கொள்கைகள் மட்டுமின்றி அரசின் ஒட்டுமொத்த கல்விக் கொள்கையே ஒருங்கிணைந்ததாக இல்லை. கல்வி, சமூக நலம், ஊராட்சித் துறைகளின் கீழும், அரசின் நிதி உதவி பெறும் தனியார் மற்றும் சிறுபான்மையோர் நிர்வாகத்தின் கீழும், முழுக்க தனியார் நிர்வாகத்தின் கீழும் பள்ளிகள் இயக்கப்படுகின்றன; இதன் காரணமாக நிர்வாக மற்றும் ஊழியர் கொள்கைகள் முறையாக பின்பற்றப்படுவதில்லை.

மத்திய அரசு, கிராமப்புற மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான வசதிகளை செய்து கொடுக்காததுடன், மேட்டுக்குடியினரின் நலனுக்காக, தாய்மொழிக் கல்வியைப் புறக்கணிக்கும் 'நவோதயா' பள்ளிகளை நாடுமுழுக்க திறந்து வருகிறது. கல்வியை முழுவதும் தனியார் துறைக்கு தாரை வார்க்கும் புதிய கல்வி கொள்கையை அமுல்படுத்துகிறது. மறுபுறம், ஆசிரியர்களில் ஒரு பகுதியினர், 'தனிப்பயிற்சி' மற்றும் 'உரை எழுதுதல்' என்பவை மூலம் குறுகிய இலாப வேட்டைக்காரர்களாக உள்ளனர். இவை மக்கள் மத்தியில் அதிருப்தியையும், சினத்தையுமே ஏற்படுத்தியுள்ளன.

அரசு, திட்டமிட்டே, தனது ஊதிய உயர்வு மற்றும் கல்விக் கொள்கைகள் மூலம் ஆசிரியர்களின் ஒற்றுமையை சீர்குலைக்க சதி செய்து வருகிறது. 'ஜாக்டீ' இன்று சிதறுண்டு இருப்பதன் மூலமே, இச்சதியை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். ஆயின், போராடும் சங்கங்கள், அரசின் இந்த சூழ்ச்சிக்கு எதிராக தங்களின் ஒற்றுமைக்குப் பாரதூரமாக முயலாமல் உள்ளன. தாங்கள் சார்ந்துள்ள துறையிலேயே, பிரச்சினைகள் பூதாகரமாக நிலவும் பொழுது, தங்களின் சம்பளம் மற்றும் பணி நலன்களுக்கான கோரிக்கைகளை வைத்து மட்டுமே போராடுகின்றன. "சம்பள உயர்வு கோரிக்கையினை மட்டும் ஏற்றுக் கொண்டால் போதும்; போராட்டத்தை கைவிட்டு, மீதமுள்ள கோரிக்கைகளைப் பேசி தீர்த்துக் கொள்வோம்" எனக் கூறுகின்றன. இவை யாவும், ஆசிரியர் சங்கங்கள், முழுக்க தொழிற்சங்க வாதத்தில் மூழ்கியிருப்பதையே காட்டுகின்றன.

எனவே, பொருளாதார கோரிக்கைகளோடு மட்டும் தங்களை வரம்பிட்டுக் கொள்ளாமல், தங்களின் உரிமைகளுக்காகவும், தாங்கள் சார்ந்த துறையிலுள்ள அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்தும், போராட்டத்தை ஒருங்கிணைத்து எடுத்துச் செல்லும்போதுதான் பரந்துபட்ட மக்களின் ஆதரவையும், நல்லெண்ணத்தையும் பெற முடியும். இது ஒன்றுதான், எல்லா கோரிக்கைகளையும் வென்றெடுக்கும் வகையில், ஆட்சியாளர்களை கீழிறங்கி வரச் செய்யும்!

● ராஜன்



படிப்பகம்

www.padippakam.com

### புஷ்ஷுக்குப் பதிலாக கிளிண்டன

# புதிய மொந்தையில் பழைய கள்ளு

உலக மக்களின் பிரதான எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவனாக ஆட்டம் போட்ட ஜார்ஜ் புஷ், அண்மையில் நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ளார். எதிர்க் கட்சியான ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட பில் கிளிண்டன் பெருவாரியான வாக்குகளைப் பெற்று புதிய அதிபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தேர்தல் யானைச் சின்னத்தில் நின்று போட்டியிட்ட குடியரசுக் கட்சி வேட்பாளரான அதிபர் புஷ்ஷுக்கு மட்டுமல்ல; அமெரிக்க மேலாதிக்க வல்லரசின் போர் வெறிக் கொள்கைக்கு அதன் உள்நாட்டிலேயே பெருந்தோல்வியைக் கொடுத்துள்ளது. ரீகனும் அவரது விசுவாச சீடர் புஷ்ஷும் பின்பற்றிய போர் வெறிக் கொள்கையின் விளைவாக, அமெரிக்கப் பொருளாதாரமே நிலைகுலைந்து 40,000 கோடி டாலருக்கு மேல் பற்றாக்குறை பெருகிவிட்டது. அதிகரித்துவரும் ஆலை மூடலும், எய்ட்சும், போதை மருந்துப் பெருக்கமும், நல்வாழ்வுத் திட்டங்களுக்கான மானியக் குறைப்பினால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் அமெரிக்க மக்களை ஆத்திரமடையச் செய்துள்ளது.

இந்நிலையில் தனது வெளிநாட்டுக் கொள்கையின் சாதனைகளைப் பட்டியலிட்டுப் பிரச்சாரம் செய்தார் புஷ். வளைகுடாப் போருக்குப் பிறகு அமெரிக்க மக்களிடையே அவரது செல்வாக்கு உயர்ந்திருந்ததைச் சாதகமாக்கிக் கொண்டு, வெற்றிக் கனவில் மிதந்து அகம்பாவத்தோடு அவர் தேர்தல் பிரச்சாரம் செய்தார். ஆனால், உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடிகளின் சுமையால் அவதிப்படும் அமெரிக்க மக்களிடம் புஷ்ஷின் தேர்தல் உத்திகள் எடுபடவில்லை.

எனவே, தோல்வி பயத்தில் இந்தியப் பிழைப்புவாத அரசியல்வாதிகளையே விஞ்சும் வண்ணம், ''கிளிண்டனுக்கும் ஒரு காபரே நடனப் பெண்ணுக்கும் ரகசியத் தொடர்பு உள்ளது; தகுதியோ, திறமையோ இல்லாத இந்தக் கோமாளியைவிட எனது நாய் மில்லிக்குக்கூட எனது வெளிநாட்டுக் கொள்கையின் சாதனைகள் நன்றாகத் தெரியும்'' என்று கீழ்த்தரமாக வசைபாடுவதையே தனது பிரச்சாரமாகக் கொண்டு அமெரிக்க ஜனநாயகத்தின் யோக்கியதையை வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

ஏற்கனவே புஷ் மீது அமெரிக்க மக்கள் அதிருப்தி அடைந்திருந்த நிலையில், உள்நாட்டுப் பொருளாதார நிலைமைகளை முன்வைத்தும், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 80 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்போம் என்று கவர்ச்சிவாத வாக்குறுதிகளை அள்ளிவீசியும் பிரச்சாரம் செய்த கிளிண்டன் மீது மக்கள் நம்பிக்கை வைத்து ஆதரிக்கத் தொடங்கினர்.

குறிப்பாக, ராணுவச் செலவுகளைக் குறைத்து நிலைகுலைந்த உள்நாட்டுப் பொருளாதாரத்தை நிமிர்த்தி, அமெரிக்காவைப் பொருளாதார வல்லரசாக மாற்றுவேன் என்றும், தொழிலாளர்களின் இன்சூரன்சு, சமூகப் பாதுகாப்புச் செலவுகளை முதலாளிகள் ஏற்றுக் கொண்டால் அவர்களுக்கு வரிவிலக்கு, தொழிலாளர்களுக்கு வேலை உத்திரவாதத் திட்டம், மருத்துவக் கடனுதவி திட்டம் முதலான வாக்குறுதிகளை முன்வைத்து கிளிண்டன் பிரச்சாரம் செய்யத் தொடங்கியதும் தொழிலாளர்களும் நடுத்தர வர்க்கத்தினரும் அவரை ஆதரிக்கத் தொடங்கினர். இது தவிர, பெண்கள் கருச்சிதைவு செய்து கொள்ள உரிமை, ஓரினச் சேர்க்கைக்கு ஆதரவு என சீரழிவுக் கலாச்சாரத்துக்குப் பச்சைக்கொடி காட்டத் தொடங்கியதும் கழுதைச் சின்னத்தில் நின்ற ஜனநாயகக் கட்சி வேட்பாளரான கிளிண்டனுக்கு மேலும் செல்வாக்கு பெருகத் தொடங்கியது.

''கிளிண்டனின் வெற்றியானது, புஷ் எதிர்ப்பு அலையின் வெற்றிதானே தவிர, எதிர்க்கட்சியின் கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதமுடியாது'' என்று அமெரிக்க அரசியல் விமர்சகர்களே சுட்டிக்காட்டுகின்றனர். எல்லாவற்றையும் விட, உலகெங்கும் பல கட்சி ஜனநாயகத்தை வலியுறுத்தும் அமெரிக்காவில் இரு கட்சி சர்வாதிகாரமே நிலவுவதைக் கண்டு அதிருப்தியடைந்த மக்கள், சுயேட்சையாகப் போட்டியிட்ட ராஸ்பெரோவுக்கு 17% வாக்குகளை அளித்துள்ளனர்.



அதிபர் தேர்தலில் புஷ் படுதோல்வி அடைந்த செய்தி வெளியானதும், ஈராக்கிய மக்கள் இதைப் பெருமகிழ்ச்சியுடன் ஆரவாரமாகக் கொண்டாடியுள்ளனர். ரீகனாமிக்ஸ் எனும் ஏகாதிபத்திய போர் வெறிப் பொருளாதாரக் கொள்கைக்கு மரண அடி கிடைத்துள்ளது என்றும், ஜனநாயகக் கட்சியின் கிளிண்டன் புதிய அதிபராக வந்துள்ளதால் உலகில் அமைதிக்கும் ஜனநாயகத்துக்குமான புதிய பாதை திறக்கப்பட்டுள்ளது என்றும் சில போலி முற்போக்குகள் பெருமிதம் கொள்கின்றனர்.

இந்தப் பசப்பல்களை நம்பி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தன்மையே அடிப்படையில் மாறிவிட்டதாகக் கருத முடியாது. ஆயுதத் தளவாடங்களை உற்பத்தி செய்யும் ஏகபோக முதலாளிகளின் நலன்களை முன்னிறுத்தி போர்வெறிக் கொள்கையைப் பின்பற்றினார் புஷ். அதற்கெதிராக, நுகர்பொருள் — தொழில் துறை ஏகபோக முதலாளிகளின் நலன்களை முன்னிறுத்தி அமெரிக்காவை பொருளாதார வல்லரசாக மாற்றப் போவதாக கிளிண்டன் கூறுகின்றார். அதாவது அமெரிக்காவின் தலைவிதியை தனது கோட்டுப் பாக்கெட்டில் வைத்துள்ள ஏகபோக முதலாளித்துவக் கும்பல்களில் ஒரு பிரிவுக்குப் பதிலாக மற்றொரு பிரிவு இப்போது அதிகாரத்துக்கு வந்துள்ளது.

ரஷியாவுடனான பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டதால், உலக மேலாதிக்கப் போட்டியில் ஜெர்மனி, ஜப்பானுக்கு இணையாக தன்னை பொருளாதார வல்லரசாக நிலைநாட்டிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் இன்று அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக ஆதிக்க மண்டலங்களைக் கைப்பற்றுவதிலும் மறுபங்கீடு செய்வதிலும் ஏகாதிபத்தியங்களுக்கிடையே நீடித்துவரும் நாய்ச்சண்டை மேலும் தீவிரமடையவே செய்யும். கூடவே, புதிய அதிபர் ஜனநாயக முகமூடி அணிந்துள்ளதால் மனித உரிமை மீறல், ஜனநாயகத்துக்கு ஆபத்து என்ற பெயரில் ஏழை நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்து புதிய வடிவில் தனது ஆதிக்கச் சுரண்டலை அமெரிக்கா தீவிரப்படுத்தவே செய்யும். தனது ஒற்றைத்துருவ உலக மேலாதிக்கத்துக்கு ஏற்ப சூப்பர் 301, டங்கல் திட்டம் முதலான கொடிய ஏவுகணைகளின் மூலம் ஏழைநாடுகளின் மீது தாக்குதலை அதிகரிக்கவே செய்யும்.

எனவே போர் வெறிபிடித்த புஷ் தேர்தலில் படுதோல்வி அடைந்ததைக் கண்டு ஒடுக்கப்பட்ட ஏழை நாடுகளின் மக்கள் மகிழ்ச்சி அடைய முடியாது; புதிய வடிவிலான பொருளாதார யுத்தத்தின் மூலம் ஏழை நாடுகளைச் சுடுகாடாக்கத் தயாராகி விட்ட கிளிண்டனின் ஜனநாயக மாய்மாலங்களைக் கண்டு ஏமாந்துவிடவும் முடியாது.

● பாலன்

படிப்பகம்

www.padippakam.com



மருத்துவ உதவி கிடைக்காமல் தவிக்கும் மேகமலை எஸ்டேட் தொழிலாளர்கள்: அரசின் அலட்சியம்.



வெள்ளம் சூழ்ந்த கிராமங்கள்: மூன்று நாட்களாக அரசு எந்த உதவியும் செய்யவில்லை.





விக்கிரமசிங்கபுரத்தில் வெள்ளத்தில் தனது
ஏழைத்தாய். பட்டு, பவுடர் மேக்-அப்புடன்

# புயல்-வெள்
# சுய விளம்பர

மேகமலை எஸ்டேட்டில் நிலச் சரிவின





படிப்பகம்

www.padippakam.com



கொடுத்து கதறி முறையிடும்
ம் பாசிசத்தாய்.

மக்கள்
ஜெயா



போன தொழிலாளர்கள்.

"காப்பாத்துங்க.... காப்பாத்துங்க..." என்ற கூக்குரல்களும் "ஐயோ, கதவை திறந்து வெளிய வர முடியலையே! தண்ணீர் ஆள முக்குதே" என்ற அவலக் குரல்களும் அந்த இரவில் அச்சுற்று வட்டாரத்தில் எதிரொலித்து அடங்கிப் போயின.

அண்மை புயல் - வெள்ளத்தின்போது விக்கிரமசிங்கபுரத்தில் முன்னறிவிப்பு இன்றி முன்னெச்சரிக்கை நடவடிக்கையின்றி இரவிலே அருகிலுள்ள அணைகள் திறந்து விடப்பட்டதால் வீடுகளில் நீர் புகுந்து 24 பேர் சில மணி நேரங்களில் மாண்டனர்.

புயலும் வெள்ளமும் இயற்கையின் எதிர்பாராத தாக்குதலாக இருக்கலாம். ஆனால் இப்படி அதிகாரிகளின் ஆட்சியாளர்களின் அலட்சியப் போக்கால் திமிர் நடவடிக்கையால் இறந்தவர்கள்தான் ஏராளமானோர்.

புயல் - வெள்ளத்தில் 211 பேர் பலி!
500 கோடி ரூபாய் நாசம்!
— அரசே தந்த பகுதி உண்மை!

கேரளா, பாண்டிச்சேரியைக் காட்டிலும் அதிக பாதிப்பு தமிழகத்துக்கே! அதுவும் நெல்லை, நாகை, கன்னியாகுமரி, திருச்சி, தஞ்சை, மதுரை மாவட்ட மக்களுக்கும் பயிர்களுக்கும்தான்!

கடந்த அக்டோபரில் கேரளா, கன்னியாகுமரி பகுதிகள் புயல் - மழையால் பாதிக்கப்பட்டன. இதையே எச்சரிக்கையாகக் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டிருக்கலாம். ஆனால் ஆட்சியாளர்கள் உதாசீனப்படுத்திவிட்டனர்.

பாலங்கள், சாலைகள் எல்லாம் மண்ணோடு மண்ணாகின. போக்குவரத்து இல்லை. மின்சாரம் இல்லை. உணவு இல்லை. உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும் பாதுகாப்பான இடமில்லை.

பரிதவித்தனர் மக்கள். பகட்டாக வந்த கலெக்டர்களோ பத்திரிக்கை படத்திற்கு முகம் கொடுத்துவிட்டுப் போனார்கள்! எம்.எல்.ஏக்களோ மந்திரிகளோ 'அடுத்தமுறை ஓட்டுப் போடுவதற்கு மக்கள் எஞ்சியிருக்கிறார்களா' எனப் பார்த்துவிட்டுப் போனார்கள். பலர் வரவேயில்லை. நிவாரண - மீட்புக் குழுக்களோ ஒருசிலரை நலம் விசாரித்துவிட்டுச் சென்றது.

மக்கள் தங்களுக்குள் உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருக்காவிட்டால் இளைஞர்களும், சமூக நல அமைப்புகளும், பகுதியிலுள்ள கட்சிக்காரர்களும் பாதுகாப்பு - மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்காவிட்டால் இன்னும் ஏராளமானவர்களை இழந்திருப்போம்.

அரசுதான் மக்களைத் தேடி வரவில்லை மக்கள் தாமாக வந்து அரசிடம் உதவி கேட்டும் மறுக்கப்பட்ட கொடுமையும் நிகழ்ந்தது. மதுரை - மேகமலையில் எஸ்டேட் தொழிலாளர் குடும்பத்தினர் காலரா, வயிற்றுப் போக்கால் அவதிப்பட்டனர். இவர்களைக் காப்பாற்ற மலை உச்சிக்கு வரமறுத்த அரசு மீட்புக் குழுவிடம் எஸ்டேட் ஊழியர்கள், மருந்து கேட்டும் தர மறுத்தனர்.
மருந்தும் நமது வரிப்பணம்!
அதிகாரிக்கும் நமது வரிப்பணம்!
இருந்தும் நமக்கு உதவ மறுக்கும் திமிர்த்தனம் எங்கிருந்து வந்தது?!

மக்கள் கெஞ்சி மட்டும் கேட்கவில்லை.சில இடங்களில் நிவாரண - மீட்புப்பணி உதவி கேட்டு போராடியும் பயனில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

வந்தார் ஜெயலலிதா! சிதைந்துபோன படகையும் இடிந்துபோன பாலத்தையும் சரிந்துபோன மண்ணையும் 'செட்டப்' செய்யப்பட்டவர்களையும் கண்டார்! அரசு பணத்தில் வேட்டி, சேலை, பணம் கொடுத்து அ.தி.மு.க. கொடுத்ததாகக் காட்டி ஆதாயம் தேடிக்கொண்டார்!

துக்கம் விசாரிக்க வருபவள் பட்டு, நகை, பவுடர், பூ, புன்னகை தவழ வந்தால் எப்படியிருக்குமோ அப்படித்தான் இருந்தது 'ஜெ'யின் 'டூர்'! பூனை எலிகளோடு மட்டுமல்ல தோழியர் சகிதம் படோடோபம் குறையாமல் வந்தார். மேடைக்கு அலங்காரம் குறையவில்லை. வரவேற்பு சுவரொட்டிகள், தோரணங்கள், வளைவுக்கும் குறைவில்லை.

"ஜெயலலிதா வழியில் காரை நிறுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி". "ஜெயலலிதா எல்லோருக்கும் கனிவாக ஆறுதல் கூறினார்" "மத்திய அரசிடம் ஜெயலலிதா நிவாரண நிதி 500 கோடி ரூபாய் கோரியுள்ளார்" — என மக்களை மயக்க பலவகை, பல வண்ண விளம்பரங்களுக்கும் பஞ்சமில்லை.

மதுரை மேகமலையில் 'புருக்பாண்ட் டீ எஸ்டேட்டு'க்கு — நிர்வாகத்துக்கு அதிக சேதமில்லை. எஸ்டேட் தொழிலாளர்கள்தான் அதிகம் மண்ணுக்குள் புதைந்தார்கள், பள்ளமான பகுதியில் வாழ்ந்ததால்!
பெரிய வீடுகளுக்கு - மாடிக் கட்டிடங்களுக்கு பாதிப்பில்லை. குடிசைகளும், கூடாரங்களும்தான் அடித்துச் செல்லப்பட்டன!

எவ்வளவோ நாகரிகமும், விஞ்ஞானமும் வளர்ந்து என்ன பலன்? சாதாரண மக்கள் இன்னும் புயல் - வெள்ளம் - மழைக்கு பலியாவது ஆதிகால சமுதாய நிலைக்குச் சமமாக அல்லவா உள்ளது?

விஞ்ஞான வளர்ச்சியும், நவீன பாதுகாப்பு வசதிகளும் சாதாரண மக்களுக்கு எங்கே? மக்களை ஏய்ப்பவர்களுக்கு அல்லவா பலனளிக்கிறது?!

● சப்பு

படிப்பகம்

www.padippakam.com

## பெண் குழந்தை தத்து

# ‘புரட்சித் தலைவி’யின் புரட்டுத் திட்டம்

“புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்” என பெண் குழந்தையை அரசே தத்து எடுத்துக் கொள்ளும் முறையை உருவாக்கியுள்ளார், ஜெயலலிதா. இதன் மூலம் தமிழகத்தில் நடக்கும் பெண் சிசு வதை - கொலையைத் தடுத்து நிறுத்தி விடப்போவதாக பகட்டித் திரிகிறார்கள், ‘ஜெ’யின் பரிவாரங்கள்.

பெண்கள் மீதான சமூகக் கொடுமைகளில் மிகக் கொடியது வரதட்சணைக் கொடுமை. இதனாலேயே பெண் செலவுக்கு இலக்கணமாகி ‘சுமையாகி’ நிற்கிறாள்! மணப்பெண்ணோடு நகையும், பணமும், கட்டிலும், பீரோவும், டி.வி.யும் வந்தால்தான் இன்று திருமணமே நடக்கிறது எனலாம். வாழ்க்கைக்கான உத்தரவாதமின்மையாலும் தூண்டிவிடப்படும் ஆடம்பர வாழ்க்கை - பொருள் மோகத்தாலும் வரதட்சணைப் பேய் எளிதாக எல்லோரையும் பிடித்தாட்டுகிறது. இவ் வரதட்சணைக் கொடுமையால் தற்கொலைகளும் கொலைகளும் அன்றாட செய்தியாகிவிட்டன. இது ஒருபுறமிருக்க வரதட்சணைக் கொடுமையின் அச்சத்தால், பெண் பிள்ளைகளை ‘கரையேற்ற’ இயலாத பெற்றோர்கள் மனதை கல்லாக்கிக் கொண்டு எடுக்கும் முடிவுதான் பெண் சிசு கொலை.

சரி, இப் பெண் சிசுக் கொலையைத் தடுக்க வந்திருக்கும் ‘புரட்சித் தலைவி’யின் திட்டத்தைப் பற்றி பார்ப்போம்.

பெண் குழந்தை வேண்டாத தாய்மார்கள், வந்து தங்கி குழந்தை பெற்றுவிட்டு அரசிடமே ஒப்படைத்துவிட்டுச் செல்வதற்கென முதல்கட்டமாக சேலத்திலும், மதுரை - உசிலம்பட்டியிலும் 6 மையங்களை தமிழக அரசு அமைத்துள்ளது. பெற்றெடுத்த பெண் குழந்தை வேண்டாம் எனக் கருதுபவர்கள் அக்குழந்தையை அரசிடம் ஒப்படைப்பதற்கு ஏதுவாக ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவுக் கூடங்களிலும் தொட்டில்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் ஆண் குழந்தைகளே இல்லாமல், பெண் குழந்தைகளே பெறும் பெற்றோர்கள். ஒரு குழந்தையை அரசு நிதியுதவி பெற்று வளர்க்கும் திட்டமும் 20,000 குழந்தைகளுக்காக காத்திருக்கிறது.

இதுவன்றி சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெண் சிசு வதை - கொலை குறித்தும் வரதட்சணைக் கொடுமை குறித்தும் தகவல் தந்தால் நடவடிக்கை எடுக்க சிறப்பு பிரிவு ஒன்றையும் தொடங்கியுள்ளார்கள். கொளத்தூர், ராசிபுரம் பகுதியில் பெண்சிசு கொலை செய்தி கிடைத்து அதிகாரிகள் நடவடிக்கையும் எடுத்துள்ளனர். — இதுதான் ‘புரட்சித் தலைவி’ திட்டம். சேலம், உசிலம்பட்டியல்லாது தமிழகத்தின் பிற பகுதிகளிலும் நடக்கும் பெண் சிசுக்

கொலையைக் காட்டி இத்திட்டத்தை
கம் முழுவதற்கும் விரிவுபடு
கோரிக்கை எழுப்பி வருகிறார்கள்.

சேலத்திலும் உசிலம்பட்டியிலும் ந
பெண் சிசுக் கொலையை பத்திரிக்
அம்பலப்படுத்தி, “பெண், முத
இருந்தும் இப்படி ஒரு அநீதியா?
உசுப்பிவிட்டன. விலைவாசி, ஊழ
டம் — ஒழுங்கு சீர்கேடு, அடக்
யால் மக்களின் வெறுப்புக்குள்ளா
மைப்பட்டும் குறிப்பாக பெண்கள்
னையில் — பத்மினி கற்பழிப்பு சம்ப
சந்திரலேகா அமில வீச்சு சம்பவ
அவப்பெயர் சம்பாதித்தும் உ
ஜெயா கும்பல். இவற்றிலிருந்து ம
கவனத்தை திசைதிருப்ப இப்பெண்
கொலையையே ஒரு கருவி
கொண்டு கவர்ச்சித் திட்டத்தை
லிதா அறிவித்துள்ளார் என்ப
உண்மை.

இக்கும்பலுக்கு மற்றபடி பெண்
கொலையைத் தடுப்பதற்கான
டையோ அருகதையோ கிடையா
திட்டமும் அதையே நிரூபிக்கிறது.

‘புரட்சித் தலைவி’யின் திட்டம் தொ
நடைமுறையாவதற்கு உத்திரவாத
வும் இல்லை. உலக வங்கியின்
ருந்து 34 கோடி ரூபாயை இத
ஒதுக்கி செயல்படுத்திக் கொண்டிரு
கள். மானியங்களையும் இலவசத் தி
ளையும் வெட்டச் சொல்லி ஏற்
உலக வங்கி நிர்பந்தித்து வருகிறது.
யாளர்களும் தலையாட்டி அ
செய்து கொண்டிருக்கிறார்கள். என
திட்டத்தின் எதிர்காலம் கேள்விக்கு

போதிய இடவசதி, மருத்துவ வசதி
சுகாதாரமற்று இருக்கும் ஆரம்ப சு
நிலையங்களில்தான் இத்திட்டத்து
மையங்களும் செயல்படுகிறது எ
அதன் கொடுமையை நம்மால்
கொள்ள முடியும்! மேலும் தத்து எ
குழந்தையை அரசு அனாதை இல்ல
வைத்துத்தான் வளர்க்கப் போகிற
அரசின் அனாதை இல்லங்களைப்
சொல்லவே தேவையில்லை. அடி
வசதிகள், பாதுகாப்பு இன்றி பல்லி
றன. அனாதைக் குழந்தைகளை
விரோதிகள் தமது தொழிலுக்கு கை
கப் பயன்படுத்திக் கொள்வதும்
கலை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது
நடக்கிறது. எனவே அரசு தத்து எ
பெண் குழந்தையின் எதிர்காலமு
யமே!

இதுவல்லாமல் அரசு தத்து எடுக்கு
தைகள் அனாதை என்று முத்திரைக்
பட்டு சமூகத்திலிருந்து தனிமைப்ப
படுகிறார்கள். படிப்பு, வேலை,
வாழ்க்கை, சமூக அந்தஸ்து அனை
தனி ஒரு ‘சாதி’யாக்கப்படுகிறார்க
ளால் அவர்களிடம் எஞ்சியி
விரக்தி மட்டுமே. அவமானப்படுத்
புறக்கணிக்கப்படுவதால் விரக்தியி
லைக்குச் செல்லும் சிலர் தற்கொலை
கொள்வதையும் பார்க்கிறோம்.

சேலம் மாவட்டம் மல்லூரில் அரசு தொட்டிலில் போடப்பட்ட அனாதை பெண் குழந்தையை பார்வையிடும் அமைச்சர் இந்திரகுமாரி.





படிப்பகம்

www.padippakam.com

லும், இத்திட்டம் மேலைநாட்டுப் பாணி
ல் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை
ற்றோர்கள் தட்டிக்கழிக்கவே உதவி
ய்யும். குழந்தை பெறுவதை எந்திரகதி
ளதாகவும் வெறும் பாலுணர்ச்சி விவகா
ாகவும் மாற்றிவிடும். அதாவது குடும்ப
மைப்பை சீர்குலைக்கவும் கலாச்சாரம் -
ன்பாட்டை சீரழிக்கவுமே வழிகோலும்.

வுமையாலும் வரதட்சணைக் கொடுமை
லும் நிகழும் இப்பெண் சிசுக்
ாலையை தடுப்பதற்கென மாவட்ட ஆட்
ர் அலுவலகத்தில் உருவாக்கப்பட்ட
ப்பு பிரிவு முறையும் புதியது அல்ல.
பற்றிற்காக ஏராளமான சட்டங்களும்
டங்களும் ஏற்கனவே உருவாக்கப்பட்
 சில நடைமுறையிலும் இருக்கின்றன.
ிப்பாக வரதட்சணைக் கொடுமையைத்
ப்பதற்காக கடுமையான தனிச் சட்டங்க

ரட்சித் தலைவி'யின் திட்டம்
ாடர்ந்து நடைமுறையாவ
கு உத்திரவாதம் ஏது
ல்லை. இதனால் அரசு தத்து
டுக்கும் பெண் குழந்தையின்
ிர்காலம் கேள்விக்குறியே!.



் தனி அதிகாரிகளும் போட்டுள்ளார்
 ஆனாலும், வரதட்சணைக் கொலை
 அதிகரிக்கின்றன.

ன் சிசுக் கொலை ஒரு சமூகப் பிரச்
ன. இழிந்த அரசியல் — பொருளாதார
கலாச்சார — பண்பாட்டின் வெளிப்
. எனவே சமூக மாற்றமும் அதற்கான
ிப்புணர்வுமே இப்பிரச்சினையை
க உரிய வழி. வெறுமனே சட்டங்க
லோ, கவர்ச்சித் திட்டங்களாலோ, சீர்தி
ருங்களாலோ, நிவாரணங்களாலோ
தயும் சாதிக்க முடியாது.

ன்னடிமைத்தனத்தையும், வரதட்ச
ணையையும் கருத்தியல் ரீதியாகத் தூண்டி
 இவற்றை பாதுகாக்கும் அரசு எந்திரத்
 ஒரு உறுப்பாக செயப்பட்டும் வரும்
 ஆட்சியாளர்களால் எப்படி பெண்
 கொலையைத் தடுக்க முடியும்? அது
கவர்ச்சி அரசியல் நாயகி ஜெயலலிதா
 எப்படி முடியும்? நிறைய பெண்
டபாளரை நிறுத்தியும், பெண் போலீசு
லயம் அமைத்தும் பெண் என்பதையே
தனமாக வைத்து கவர்ச்சி அரசியல்
தும் ஜெயலலிதாவிற்கு இப்பிரச்சினை
ஒரு ஆதாயமாகிவிட்டது. ● ராசு

## பஞ்சாப்:

# அரசு பயங்கரவாதத்தின் புதிய கொலை உத்திகள்

"பயங்கரவாதத்தால் உருக்குலைந்து போன பஞ்சாபில் அமைதி திரும்பிக் கொண்டிருக்கிறது; காங்கிரசு ஆட்சிக்கு வந்த பிறகு நிலைமைகள் வெகுவாக மாறிவிட்டன" என்று 'தேசிய'ப் பத்திரிகைகளும், காங்கிரசுப் பெருச்சாளிகளும், போலீசு உயரதிகாரிகளும் அண்மைக்காலமாக அடிக்கடி அறிக்கைகள் விடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

"இவ்வாண்டு பிப்ரவரியில் தீவிரவாதிகளால் 226 பேர் கொல்லப்பட்டனர்; செப்டம்பரில் அது 42 பேராகக் குறைந்துவிட்டது. முன்பெல்லாம் இரவு 8 மணிக்கு மேலே யாரும் நடமாட முடியாத நிலைமை இருந்தது; இப்போது இரவில் மக்கள் தைரியமாக நடமாட முடிகிறது. பயங்கரவாத பீதியினால் பஞ்சாபை விட்டு வெளியேறியவர்கள், இப்போது மீண்டும் பஞ்சாபுக்கே திரும்பத் தொடங்கியுள்ளனர். சட்டசபை தேர்தலின் போது வாக்களிக்கக்கூட அஞ்சிய மக்கள், அண்மையில் நடந்து முடிந்த முனிசிபாலிடி தேர்தலின்போது 70%-க்கு மேல் வாக்களித்துள்ளனர். பஞ்சாப் மக்களிடம் புதிய நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியுள்ளது" என்று அவர்கள் சாதனைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்கள்.

பஞ்சாபில் அரசு பயங்கரவாதக் கொலைவெறியாட்டங்களுக்குப் பெயர் போன அதே கே.பி.எஸ்.கில்தான் இன்னமும் போலீசு தலைமைப் பொறுப்பில் இருக்கிறார். அரசு பயங்கரவாதப் பயிற்சிப் பெற்ற ரகசிய கொலைக் குழுக்களைக் கொண்ட அதே போலீசுப் படைதான் இன்னமும் நீடிக்கிறது. புதிதாக காங்கிரசு பொம்மையாட்சி மட்டுமே வந்துள்ளது. அரசின் கொள்கையிலோ, போலீசின் தன்மையிலோ அடிப்படையில் எந்த மாற்றமும் நிகழாத போதே எப்படி இந்த அதிசயம் நடந்தது? அமைதியை எப்படி நிலைநாட்ட முடிந்தது?

உண்மையில் இது சுடுகாட்டு அமைதி. பஞ்சாபில் அமைதியாக வீசும் வடதிசைக் காற்றில் பிணவாடையே வீசுகிறது. தீவிரவாதிகளை ஒழிப்பது என்ற பெயரில் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ள போலீசும் துணை ராணுவப் படைகளும் நடத்திவரும் அட்டூழியங்கள் எல்லை மீறிவிட்டன. அதிகார வர்க்கம் மற்றும் நீதித் துறையின் ஆசியோடு போலீசின் சட்டவிரோதமான காட்டுமிராண்டித்தனங்கள் திட்டமிட்டே மறைக்கப்படுகின்றன. போலீசு தரும் அறிக்கைகளை அப்படியே வாந்தி எடுக்கும் 'தேசிய' பத்திரிகைகளின் இருட்டடிப்புகளையும் மீறி மெதுவாகக் கசிந்துவரும் உண்மைகள் உதிரத்தை உறையச் செய்பவையாக உள்ளன.

**மோதலில் இறந்ததாக கட்டுக்கதை:**

அப்பாவி இளைஞர்களைப் பிடித்துச் சென்று அவர்களை தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி சுட்டுக் கொல்வது; பின்னர் போலீசுடன் நடந்த 'மோதலில்' இறந்ததாக கதை கட்டுவதென்பது பஞ்சாப் போலீசுக்கு கைவந்த கலை. ஆனால், இப்படுகொலைகளை மூடிமறைப்பதில் அவர்கள் செய்யும் தில்லுமுல்லுகளே அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடுகின்றன.

1990-ம் ஆண்டு டிசம்பர் 8-ம் நாளன்று அமிர்தசரசிலுள்ள நியூ பாங்க் ஆப் இந்தியா எனும் வங்கிக் கிளையில் ரூ.20 லட்சம் ரொக்கமும், நகைகளும் தீவிரவாதிகளால் கொள்ளையிடப்பட்டது.



**தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாகப் புளுகி, போலீசு சித்திரவதை செய்து கொன்ற அவதார் சிங்.**

அடுத்த சில நாட்களில் இக்கொள்ளையில் ஈடுபட்ட 5 பேரைப் பிடித்து பணத்தை மீட்டுவிட்டதாகவும் அப்போது நடந்த மோதலில் அவர்கள் அனைவரும் மாண்டதாகவும் போலீசு கூறியது. உண்மையில் அப்பாவிகள் 5 பேரைப் பிடித்து சுட்டுக் கொன்று வயல்வெளியில் பிணங்களைப் போலீசார் வீசியெறிந்திருந்தனர். சில பத்திரிகையாளர்கள் இதை அம்பலப்படுத்தத் தொடங்கியதும், மாவட்ட போலீசு சூப்பிரண்டெண்ட் தலைமையில் நடந்த விசாரணையில், போலீசாரின் அத்துமீறல் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், இன்றுவரை போலீசார் வழக்கு பதிவு செய்யவில்லை. இப்போது

படிப்பகம்

www.padippakam.com

இந்த வழக்கு தொடர்பான கோப்புகளே காணாமல் போய்விட்டதாக போலீசு கூறுகிறது.

கடந்த செப்.13-ந் தேதியன்று அமிர்தசரஸ் அருகிலுள்ள தார்டி கிராமத்தில் 3 தீவிரவாதிகள் போலீசுடன் நடந்த மோதலில் மாண்டு போனதாக போலீசு கூறியது. ஆனால், விசாரணையில் அவ்வாறு மோதல் எதுவும் நடக்கவில்லை என்றும், அம்மூன்று தீவிரவாதிகளும் போலீசு காவலில் உள்ளதாகத் தெரியவந்தது. ஆனாலும், தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று அப்பாவிகள் யார் என்று இன்றுவரை தெரியவில்லை. அதேசமயம் காவலில் உள்ளதாகக் கூறப்படும் மூன்று தீவிரவாதிகளையும் போலீசார் கோர்ட்டில் இன்றுவரை ஒப்படைக்கவில்லை. வேறு வார்த்தையில் சொன்னால், அவர்கள் ஏற்கனவே கொல்லப்பட்டுவிட்டார்கள்!

**'பறவை தப்பியோடிவிட்டது!'**
**போலீசின் புதுக் கரடி**

ஒருவரைக் கைது செய்தால் அவரை 24 மணி நேரத்திற்குள் கோர்ட்டில் ஒப்படைக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. பஞ்சாப் போலீசார் இச்சட்டத்திலிருந்து தப்பிக்க ஒரு புதிய உத்தியைக் கையாண்டு வருகின்றனர். சட்ட விரோதமாக விசாரணைக் கைதிகளைக் கொட்டடியில் அடைத்து வைத்துக் கொண்டே, அவர்கள் தங்கள் காவலிலிருந்து தப்பியோடி விட்டதாக அண்மைக்காலமாக புளுகி வருகின்றனர்.

கடந்த ஜூன் 1-ந் தேதியன்று சண்டிகார் அருகிலுள்ள மொகாலி எனும் கிராமத்தில் தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் குற்றம் சாட்டி பரம்ஜித்சிங் என்பவரை போலீசு கைது செய்தது. ஒரு மாதகாலமாகியும் அவரை கோர்ட்டில் ஒப்படைக்காததால் அவரது தாய் உயர் நீதிமன்றத்தில் புகார் செய்தார். பரம்ஜித்சிங்கை கோர்ட்டில் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்திரவிட்டது. ஆனால், போலீசாரோ அவர் தப்பியோடிவிட்டதாக கைவிரித்தனர். ஜூன் 27-ந் தேதியன்று ஒரு தீவிரவாதியை அடையாளங்காட்ட அவரை 'ஜீப்'பில் அழைத்துச் சென்றதாகவும், வழியில் டயர் பஞ்சராகி புதுடயர் மாற்றிக் கொண்டிருந்தபோது அவர் தப்பியோடிவிட்டதாகவும் போலீசார் புளுகினர். இதற்கு மேல் எங்களால் எதுவும் செய்ய முடியாது என்று நீதித்துறையும் பரம்ஜித்சிங்கின் தாயிடம் கைவிரித்துவிட்டது. உண்மையில், பரம்ஜித்சிங் சுட்டுக் கொல்லப்பட்டிருக்க வேண்டும்; அல்லது போலீசின் கொட்டடியில் வதைபட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

அவதார் சிங் ஷட்ரானாவின் கொலை இதைவிடக் கொடூரமானது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் அவர் கைது செய்யப்பட்டார். தீவிரவாதிகளின் ரகசிய பதுங்குமிடங்களை அடையாளம் காட்ட போலீசார் அவரை அழைத்துச் சென்றபோது, திடீரென தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் அவர் மாண்டு போனதாக போலீசார் கூறினார். ஆனால், அவரது உடலில் ஒரு



தூக்கிலிடப்படும் முன் இனிப்புப் பரிமாறிக் கொண்டு மரணத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடிய ஜிண்டா, சுகா.

இடத்தில்கூட துப்பாக்கிக் குண்டுக் காயம் இல்லை. போலீசாரின் மிருகத்தனமான சித்திரவதையின் அடையாளங்களே இருந்தன.

பரம்ஜித்சிங், அவதார் சிங்கைப் போல போலீசார் இழுத்துச் சென்ற 300-க்கும் மேற்பட்ட விசாரணைக் கைதிகளின் கதி என்னவாயிற்று என்று இதுவரை தெரியவில்லை.

**''நாங்கள் கைது செய்யவில்லை''**
**போலீசின் அரிச்சந்திர நாடகம்!**

அண்மைக்காலமாக பஞ்சாபில் காணாமல் போவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சீருடை அணியாத போலீசார், சந்தேகப்படும் நபரைக் கைது செய்வது - ரகசியமாகக் கடத்திச் செல்வது, பின்னர் சுட்டுக் கொன்றுவிட்டு தீவிரவாதிகளின் மீது பழியைப் போட்டு தப்பித்துக் கொள்வது என்ற புதிய உத்தியைப் பின்பற்றி வருகின்றனர். குறிப்பாக, போலீசாரின் குடும்பங்களை அழித்தொழித்து வரும் தீவிரவாதிகளின் செயலுக்குப் பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்தோடு, தீவிரவாதிகளின் உறவினர்களைக் கடத்திச் சென்று சுட்டுக் கொல்வதை பஞ்சாப் போலீசு நடைமுறைப் படுத்தி வருகிறது.

கடந்த மே 18-ம் தேதியன்று பரம்சதிந்தர் சிங் என்ற இளைஞர் போலீசாரால் கைது செய்யப்பட்டார். அவர் ஒரு தீவிரவாதியின் தூரத்து உறவினராவார். 4 மாதங்க

ளுக்கும் மேலாக அவரைக் கோர்ட்டில் படைக்காததைக் கண்டித்து அவரது த அமிர்தசரஸ் தலைமை போலீசு அதி அலுவலகத்தின் முன் அக்.2-ம் நாள சாகும்வரை உண்ணாவிரதப் போரா தைத் துவக்கினார். ஆனால், போலீசா நாங்கள் அந்த நபரைக் கைது செய்ய இல்லை என்று சாதிக்கின்றனர்.

பூட்டாசிங் பாட்டி என்பவர் ளாள் ராணுவ வீரர் ஆவார். அவர் பஞ் மாநில தாழ்த்தப்பட்டோர் விடுதலை ணியின் செயல்வீரர் ஆவார். அமைப்பானது போலீசின் அத்து களை எதிர்த்து அவ்வப்போது கண்ட தெரிவித்து வந்தது. கடந்த செப்.24-ந் யன்று பின்னிரவில் போலீசார் அவ கைது செய்தனர். அவரது விடுதலைக் தாழ்த்தப்பட்டோர் அமைப்பு தொட போராடியது. ஆனால், ஜாக்ரான் மாவ போலீசு தலைமை அதிகாரியோ, நாங் அவரைக் கைது செய்யவே இல் போலீசு சீருடை அணிந்த தீவிரவாத அவரைக் கடத்திச் சென்றிருக்கலாம் எ கூறினார். போலீசு தலைமை இயக்குன கில், எந்த போலீசு நிலையத்திலும் டிப்பட்ட நபர் விசாரணைக்காகக் கொண்டு வரப்படவில்லை எ அறிக்கை வெளியிட்டார். இன்றுவரை டாசிங் பாட்டி என்ன ஆனார் என்றே யவில்லை.

கடந்த ஓராண்டு காலத்தில் இவ் நூற்றுக்கும் மேற்பட்டோர் போலீசா கைது செய்யப்பட்டு 'காணாமல்' போ ளனர். இவற்றில் 24 பேரின் வழக்குகள குறிப்பிட்டு சர்வதேச பொதுமன்னிப (Amnesty) கழகம் கடந்த பிப்ரவரியில் திய அரசிடம் விளக்கம் கேட்டது. சம்ப பட்ட யாரையும் நாங்கள் கைது செய்ய இல்லையென பஞ்சாப் போலீசார் சத்தி செய்தனர். அதேசமயம் பஞ்சாபின் ளாள் தலைமைச் செயலரான கபூர், ''போ சாரின் மறுப்புகள் எந்தவகையிலும் தையற்றவை'' என்று மத்திய உள்து அமைச்சகத்துக்கு கடிதம் எழுதினார்.

**முதலில் சுட்டுக்கொல்!**
**பிறகு விசாரணை செய்!**

தீவிரவாதிகளைப் பிடிக்க ரகசிய நியமிக்கப்பட்டுள்ள ஆள்காட்டிகளு போலீஸ் வட்டாரத்தில் ''பூனை'' எ செல்லப் பெயர் உண்டு. தீவிரவாதிகள நடமாட்டங்களைப் பற்றி போலீசுக்கு தப் பூனைகள் காட்டிக் கொடுக் ஆனால், பல நேரங்களில் பூனைகளின் றான தகவல் காரணமாக, அப்பாவி பலர் போலீசாரால் கொல்லப்படுகிறார் பஞ்சாப் மட்டுமன்றி, அண்டை மாநில ளுக்கும் ரகசியமாகச் சென்று இத்தல படுகொலைகளை போலீசார் நடத்தி கின்றனர்.

அரியானா மாநிலத்தில், அம்பா அருகே ஒரு வெள்ளை மாருதி கா ஜூலை 12-ந் தேதியன்று ஜஸ்விந்த் என்ற சீக்கிய வர்த்தகர், தனது 4 வ குழந்தை மற்றும் உறவினர்களோடு செ போது சீருடை அணியாத பஞ்சாப் போ



படிப்பகம்

www.padippakam.com

அவர்களை வழிமறித்து சுட்டுக் கொன் ர். விபரம் அறிந்து கிராம மக்கள் ண்டு வந்து சடலங்களைப் பார்த்து, டையாளம் கண்டு இக் கொடுஞ்செய கு எதிர்ப்பு தெரிவித்தனர். வேறுவழி றி போலீசார் தவறுதலாக சுட்டுவிட்ட வருத்தம் தெரிவித்தனர்.

நிர்வாயர் சிங் என்ற சீக்கிய தீவிரவா ன் தலைக்கு ரூ. 10 லட்சம் விலை வைக் ட்டுள்ளது. நிர்வாயர் சிங்கின் சாயலில் ந்த ஜஸ்நிதர் சிங்கை, இவர்தான் தீவிர தி என்று ஒரு "பூனை" பஞ்சாப் போலீ க் காட்டிக் கொடுத்தது. பரிசும், பதக்க பெறும் ஆவலில் போலீசார் நடத்திய ட்டைதான் ஜஸ்ஷிந்தர்சிங் குடும்பத்தி படுகொலை! இச்செய்தி வெளியான அரியானா போலீசு தலைமை இயக்கு "இத்தகைய பூனை - எலி விளை டை உங்கள் மாநிலத்தோடு வைத்துக் ள்ளுங்கள்" என்று பஞ்சாப் போலீசை ரித்துள்ளார். இதேபோல் அமிர்தசரஸ் அகாலிதள (காபுல் பிரிவு) தலைவர் ம்சிங் கார்கஜ், தீவிரவாதி என போலீ ல் தவறாக கருதப்பட்டு கடந்த அக். ந் தேதியன்று சுட்டுக் கொல்லப்பட்டார். லீசாரின் இத்தகைய பூனை-எலி ளையாட்டினால் நூற்றுக்கும் மேற்பட்ட பாவி சீக்கியர்கள் கொல்லப்பட்டுள்ள இது தவிர மாவட்டந்தோறும் எல்லை சோதனைச் சாவடிகளை அமைத்துக் ண்டு, சந்தேகப் படுவோரையும் வாக தை நிறுத்தாமல் சென்றவர்களையும் க் கொன்று அவர்களைத் தீவிரவாதி என்று முத்திரை குத்தி தமது செயலுக்கு லீசார் நியாயம் கற்பித்து வருகின்றனர்.

**ணக்கில் வராத பெருந்தொகையும் ரகசிய கொலைக் குழுக்களும்!**

தீவிரவாதிகளை ஒழிப்பது என்ற பரில் பஞ்சாப் போலீசு பின்பற்றி வரும் பயங்கரவாதக் கொள்கையானது போலீசாரை கொலை வெறிபிடித்த காட்டுமிராண்டிகளாக மாற்றியிருக்கிறது. போலீசாரின் கருப்புப் பட்டியலில் இல்லாத தீவிரவாதிகளைக் கொன்றால் அதற்கென சிறப்புப் பரிசும் பதக்கமும் தனியாக உண்டு. வாரந்தோறும் இவ்வளவு பேரைக் கொன்றொழித்தோம் என்று ஒவ்வொரு மாவட்ட சூப்பிரண்டெண்டும் பட்டியலை அனுப்பி ரூ.50,000 முதல் 5 லட்சம் வரை பரிசாகப் பெறுகின்றார்கள். கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடத்திய கணக்கற்ற கொலைகளின் மூலம் 1.5 கோடி ரூபாய் வரை சிறப்புச் சன்மானமாக போலீசார் பெற்றுள்ளனர். இது அதிகாரபூர்வமாக கணக்கில் காட்டப்படும் தொகை. இது தவிர, இரகசிய சேவைச் செலவுக்கென தனியாக கணக்கில் வராமல் கோடிக்கணக்கில் செலவிடப்படுகிறது. இத்தொகை, போலீசாரின் ரகசிய கொலைக் குழுக்களுக்காக தலைமை இயக்குனர் கில்-இன் பொறுப்பில் செலவிடப்படுகிறது. கிரிமினல் போலீசாரையும், தொழில்முறை கிரிமினல்களையும் கொண்ட ரகசிய கொலைக் குழுக்கள் அரச பயங்கரவாதத்தின் முக்கிய அங்கமாகும். கடந்த ஆண்டு மட்டும் ரகசிய கொலைக் குழுக்களுக்காக 2.9 கோடி செலவிடப்பட்டுள்ளது. எந்த நோக்கத்திற்காக என்ன பணிகளுக்காக இத்தொகை செலவிடப்பட்டது என்று அரசுக்கோ, பொதுக் கணக்கு - தணிக்கை அதிகாரிக்கோ கூட போலீசார் அறிவிக்க வேண்டியதில்லை. இதன் விளைவாக பஞ்சாப் மாநிலம் நாளுக்குநாள் சுடுகாடாகி வருகிறது.



கே.பி.எஸ்.கில்; பஞ்சாபை சுடுகாடாக்கும் பயங்கரவாத போலீசின் தலைமை இயக்குனர்.

"போலீசின் பயங்கரவாத அட்டூழியங்களால் வெறுப்படைந்துள்ள இளைஞர்கள் இப்போது தீவிரவாதிகளின் பக்கம் அணிதிரளத் தொடங்கிவிட்டார்கள்" என்று வேதனையுடன் கூறுகிறார், கஜ்ஜா சிங் என்ற முன்னாள் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர். 1990-ம் ஆண்டு ஜூலை மாத போலீசு அறிக்கையின்படி மொத்தம் 1026 தீவிரவாதிகள் உள்ளதாக மதிப்பிடப்பட்டது. அதன்பிறகு 2,500 தீவிரவாதிகள் கொல்லப்பட்டும்கூட, இன்னும் 1,300 பேருக்கும் மேல் இருக்கலாம் என்று போலீசு ஒப்புக்கொள்கிறது. அகாலி தளத்தின் பாதல் பிரிவு கட்சியினர் ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர்களைக் கொண்ட குழுக்களைக்கட்டி போலீசின் அட்டூழியங்களுக்கு எதிராக இயக்கங்கள் நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர். அதிகரித்து வரும் போலீசு அக்கிரமங்களை நியாயப்படுத்த முடியாமல் பஞ்சாப் பயங்கரவாத போலீசு தலைமை இயக்குனர் கில், தவறிழைத்த போலீசார் மீது இலாகாபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாய்மாலம் செய்து வருகிறார்.

எல்லாவற்றையும்விட, 1984-ல் பொற்கோயில்மீது படையெடுத்த முன்னாள் ராணுவத் தளபதி வைத்யாவைக் கொன்ற ஜின்டா, சுகா ஆகிய சீக்கிய இளைஞர்களைச் சட்டவிரோதமாக தூக்கிலிட்டுப் பழிக்குப்பழி வாங்கியதன்மூலம் இந்திய அரசு, சீக்கிய மக்களிடமிருந்தே தனிமைப்பட்டுப் போயுள்ளது. ஜின்டா, சுகா தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்து பஞ்சாபிலும் காஷ்மீரிலும் கடையடைப்புப் போராட்டம் நடந்துள்ளதோடு, சீக்கியர்கள் அவர்களைத் தியாகிகளாகவும் போற்றுகிறார்கள்.

தேன் கூட்டைக் கலைத்து விளையாடும் குரங்குபோல, அரச பயங்கரவாதத்தைத் தீவிரப்படுத்தி பஞ்சாபை ரணகளமாக்கி சீக்கிய தீவிரவாதத்தை முறியடிக்கத் துடிக்கிறது, ராவ் அரசு. இதன்மூலம் பஞ்சாபில் அமைதியை நிலைநாட்டிவிட முடியும் என்ற முட்டாள்தனமாக அது கனவு காண்கிறது. ஆனால், அரச பயங்கரவாதத்தின் எதிர் விளைவாக சீக்கிய மதவெறி பயங்கரவாதம் மீண்டும் பெருகவே செய்யும். தற்போது நிலவும் மயான அமைதி மீண்டும் ஒரு புயலையே உருவாக்கும்.

● மனோகரன்

**சாபுக்கு வெளியிலும் பயங்கரவாத நரவேட்டை: மே.வங்கத்தில் பஞ்சாப் ரகசிய லீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட சீக்கியர்**



படிப்பகம்

www.padippakam.com

# போராடிய தொழிலாளர்களை பழிவாங்கும் 'பெல்' நிர்வாகம்

## மோசடிக்கார்களுக்கு எதிராக பஞ்சாயத்து

திருச்சி - தி.வி.க. நகரில் சலவையாளர்களின் சங்கத் தலைமையில் இருக்கும் கோவிந்தராசு, ரெங்கசாமி ஆகிய மோசடிப் பேர்வழிகள், சலவையாளர்களை ஏய்த்தும் ஊர் புறம்போக்கை (பஞ்சாயத்து சலவையாளர்களுககு ஒதுக்கியதை) வளைத்தும் போட்டுள்ளனர். இப்பகுதியில் உள்ள புரட்சிகர மாணவர் — இளைஞர் முன்னணியினர் மோசடிப் பேர்வழிகள் மீது குற்றம்சாட்டி பகுதி மக்களைத் திரட்டி 22-10-92 அன்று பஞ்சாயத்து கூட்டினர். பஞ்சாயத்து கூட்டப்பட்டதன் அவசியத்தை வலியுறுத்தி பேசினர். பிறகு மக்கள் பஞ்சாயத்து கமிட்டியைத் தேர்ந்தெடுத்தனர். விளக்கம் கேட்க அழைத்த ரெங்கன் - கோவிந்தன் வராததைக் கண்டித்தும், மக்களை அவமதித்ததாகவும் பஞ்சாயத்து தீர்மானம் நிறைவேற்றியது. அடுத்த பஞ்சாயத்தில் சலவையாளர்களுக்குரிய அந்நி



லத்தை வீடில்லாதவர்களுக்குப் பிரித்து கொடுப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது. இதைக்கண்ட மோசடிப் பேர்வழிகள் பீதியடைந்துள்ளனர்.


## நெசவாளர் உரிமைக்கான குரல்! துரோகிகளாக 'மார்க்சிஸ்டு'கள்!

ஈரோடு - பள்ளிப்பாளையத்தில் விசைத்தறி முதலாளிகளால் தொழிலாளர்கள் கொடுமையாக கசக்கிப் பிழியப்படுகிறார்கள். "ஒன்றரை மாத சம்பளத்தை போனசாக கொடு", "ரூ500/-க்கு மேலுள்ள கடன் பாக்கியை ரத்து செய்", "மாதச் சம்பளம், வாரவிடுமுறை. 8மணி நேர சிப்ட் முறையை அமுல்படுத்து" முதலான கோரிக்கலை முன்வைத்து பகுதியிலுள்ள புரட்சிகர மாணவர் — இளைஞர் முன்னணி போராடி வருகிறது. 'மார்க்சிஸ்டு' கட்சி, இதே கோரிக்கைகளை வைத்து பல வருடமாக சவத்தனமாகப் போராடி எதையும் சாதிக்கவில்லை. எனவே போர்க்குணத்துடன் வரும் பு.மா.இ.மு-விற்கு நெசவாளர்கள் ஆதரவளித்தனர். இதனால் ஆத்திரமான 'மார்க்சிஸ்டு'கள் பிரசாரம், பொதுக்கூட்டம் மூலம் பு.மா.இ.மு.வினர் மீது அவதூறைப் பொழிந்தனர். "இவர்கள் (பு.மா.இ.மு.வினர்) தீவிரவாதிகள்; பட்டறைகளுக்கு தீவைப்பவர்கள்; 4 பேரைக் கொலை செய்தால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்பவர்கள்; அவர்களைப் பற்றியெல்லாம் நாங்கள் விவரமாக போலீசுக்கு எழுதிக் கொடுத்து விட்டோம்" என சேற்றை வாரியிறைத்து துரோகத்தனத்தைக் காட்டினர். இதைக் கண்டித்தும் 'மார்க்சிஸ்டு'களை அம்பலப்படுத்தியும் பு.மா.இ.மு.வினர் பிரசாரம், பொதுக்கூட்டம் வாயிலாக பதிலடி கொடுத்தனர். 'மார்க்சிஸ்டு'கள் இன்று பகுதி மக்கள், விசைத்தறி தொழிலாளர்கள், அணிகள் மத்தியிலிருந்து தனிமைப்பட்டு நிற்கின்றனர்.

## ஊற்றங்கரை கூட்டுறவில் ஊழல் பெருச்சாளிகள்!

கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கு குடிமைப் பொருட்களை விநியோகம் செய்து வரும் ஊற்றங்கரை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தனி அதிகாரி ச.சண்முகானந்தன். இவர் குடிமைப் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு எடை குறைத்து அனுப்பி தனியாருக்கு விற்று கொள்ளையடித்து வருகிறார். மேலும், ஊழியர்களுக்கு சட்டபடி கொடுக்கவேண்டிய ஊதிய உயர்வுக்காக இவர் 50,000 ரூபாய்க்கு மேல் லஞ்சம் வசூலித்துள்ளார்.

இதை பிரசுரம் போட்டு அம்பலப்படுத்தியதால் ஊற்றங்கரை-புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியைச் சேர்ந்த சப்பிரமணி என்பவரை சண்முகானந்தனின்




கையாட்கள் தாக்கினர். போலீ[...] கொண்டு தாக்கவும் முயன்றனர். ஆன[...] இவற்றை மக்கள் மத்தியில் உடனுக்கு[...] பு.மா.இ.மு.வினர் அம்பலப்படுத்த[...] அக்கும்பல் அடித்ததற்கு மன்னிப்பு [...] டது. லஞ்சம் வாங்கியதையும் திருப்[...] கொடுப்பதாக தொழிலாளர்கள் முன்னி[...] யில் ஒத்துக்கொண்டனர். இருந்தும் சு[...] தூக்குபவர்களை தூண்டி விட்டும் நிய[...] விலைக்கடையில் வேலை செய்யும் ச[...] மோகன் என்பவரை காரணமே இல்லா[...] பணி நீக்கம் செய்தும் மிரட்டியது அக்[...] பல். இவற்றை எதிர்த்துப் போராடி தொ[...] லார்கள் முறியடித்தனர். ஊழல் பெருச்சா[...] சண்முகானந்தன் மீது நடவடிக்கை எடுக்[...] கோரி பு.மா.இ.மு.வினர் பிரச்சாரம், [...] ரொட்டி வாயிலாக வீச்சாக பிரச்சா[...] செய்து வருகின்றனர். தற்போது [...] தொழிலாளர் சங்கம், விவசாயிகள் சங்[...] முற்போக்கு இளைஞர் அணி முத[...] அமைப்புகளும் மோசடி கும்பலுக்கு [...] ராக குரல் கொடுத்து வருகின்றன.

## பு.ஜ.விற்பனையாளர் கைது! மதுரை போலீசின் அதிகாரத்திமிர்!

மதுரை பெரியார் பேருந்து நிலையம் [...] கில், வெளியூர் பேருந்தில் பேசி புதிய ஜ[...] நாயகம் விற்ற புரட்சிகர மாணவர் - இ[...] ஞர் முன்னணியைச் சேர்ந்த மணவாள[...] போலீசு தாக்கி இழுத்துச் சென்றது. போ[...] நிலையத்தில் எஸ்.ஐ எதையும் விசாரிக்[...] மல் "அடித்து கேஸ் போடு" என்று கூற[...] மணவாளனின் உடைகளைக் கழட்டி தா[...] யது. போலீசு. மணவாளன், தன்னை கி[...] னல் போல நடத்துவதைக் கண்டித்து த[...] ஒரு அமைப்பைச் சேர்ந்தவர் என அறி[...] கப்படுத்திக் கொண்டபின் கிலியு[...] எஸ்.ஐ., ஆடைகளை அணியக் கொடு[...] சமாதானம் பேசி அனுப்பி வைத்துள்ள[...] மேலும் பெரியார் பேருந்து நிலையத்[...] உள்ள ஒரு கடைக்காரரை மிரட்டி பு[...] விற்கமுடியாதபடி செய்துள்ளது மது[...] போலீசு. பு.மா.இ.வினர் போலீசின் அதி[...] ரத்திமிர் நடவடிக்கையைக் கண்டித்து [...] ரொட்டி ஒட்டினர்.

## போராடிய தொழிலாளிகளை பழிவாங்கும் 'பெல்'!

பாரதமிகுமின் நிறுவனம் (BHEL), திரு[...] யில் 14,000 தொழிலாளர்களைக் கொண்[...] இயங்கி வருகிறது. வருடந்தோறும் தீப[...] ளிக்கு லாபபங்கீட்டுத் தொகையாக 2[...] போனஸ் இத்தொழிலாளர்களுக்கு வழ[...] கப்படும். ஒரு மாதத்திற்கு முன்பே கூட[...] கமிட்டி, நிர்வாகம், பங்குபெறும் தொழ[...] சங்கப் பிரதிநிதிகள் கூடி போனஸை அ[...] விப்பார்கள். ஆனால், இந்த ஆண்டு தீ[...] வளி போனஸ் தருவதற்கு நிர்வாகம் எம்[...] யற்சியும் எடுக்காமல் இருந்தது.

கொதித்தெழுந்த தொழிலாளர்க[...] அனைத்து தொழிற்சங்கத்தின் சார்ப[...] போனஸ் கூட்டுக்குழு அமைத்து 16.10.[...] முதல் வேலை நிறுத்தப் போராட்டம் எ[...] அறிவித்தனர். நிர்வாகமோ ஆர்[...]



படிப்பகம்

www.padippakam.com

ல, கணக்கு தணிக்கை முடிந்த
ன போனஸ் தருவது பற்றி முடிவெ
முடியும் எனக் கூறி முன்பணமாக
சம் தருவதாக அறிவித்தது. ஏற்க
போனஸ் நிலுவை, விலைவாசிப்படி
வ தரப்படாத நிலையில் இதை
லாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.
92 அன்று தொழிலாளர்கள் தன்னெ
பாக ஆலைக்குள் போராடினர்.
க தொழிற்சங்கத் தலைமைகள்
ட்டத்தைத் தடுக்க முயன்றும் முடிய
ல. அன்று இரவுநேர தொழிலாளர்க
விடிய விடிய கோஷமிட்டுப் போராடி
றகே நிர்வாகம் 20% போனஸ் தருவ
த்துக்கொண்டது. திருச்சியில் மட்டு
மல் ஏனைய பகுதிகளில் உள்ள
தொழிலாளர்களுக்கும் 20%
ஸ் கிடைத்தது.

ஆனால், தொழிற்சங்கத் தலைமை
மீறி இப்படிப்பட்ட போராட்டம் இனி
க்கூடாது என தொழிலாளர்களை
ங்கி அச்சத்தைக் கொடுக்கத் திட்ட
நிர்வாகம். போராடியவர்களில்
ரிக்கப்படாத - வளர்ந்து வரும் சங்க
பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனிய



BPWU) சேர்ந்த கே.சுந்தரராசு, ஆர்.
ப் தனபால் மற்றும் எம்.ஆர்.மோகன்
ஆகிய தொழிலாளர்கள் 23.10.92
நிரந்தர வேலைநீக்கம் செய்யப்பட்ட
ணவுக் கமிட்டிகளிலும், பிற தொழி
கள் பிரச்சினையிலும் சரியான முறை
போராடி வருவதால் தொழிலாளர்க
நன்னம்பிக்கையை பெற்ற சங்கம்,
ர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன்.

னவே தொழிலாளர்கள், வேலை
உத்தரவை திரும்பப்பெறக் கோரி
2 முதல் ஆர்ப்பாட்டம், ஊர்வலம்,
கூட்டம் என போராடினர். கட்டம்
ாக வேலை நிறுத்தம் செய்வதாகவும்
பிட்டனர். ஆனால், BPWU, AITUC,
அம்பேத்கார் தலித் தொழிற் சங்கங்
ிர ஏனைய பா.ஜ.க., தி.க., தி.மு.க.,
சிஸ்டு'களின் தொழிற்சங்கங்கள்
நிறுத்தம் செய்வதில்லை என பின்
துரோகமிழைத்ததால் வேலை நிறுத்
போதைக்கு திரும்ப பெறப்பட்டுள்
ிர்வாகத்தின் பழிவாங்கும் நடவடிக்
சட்ட முறையிலும், வேலை நிறுத்
பாராட்டம் மூலமும் முறியடிக்க
லாளர்கள் ஆதரவுடன் BPWU
று வருகிறது. ●



# சவுட்டாலும் சவுக்கடியும்

*தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் காஷ்மீர் அரசுக்கு பா.ஜ.க. தொண்டர்கள் ஒத்துழைப்புக் கொடுக்கத் தயார்.*

*—காஷ்மீர் மாநில பா.ஜ.க. தலைவர், சமன்லால் குப்தா.*

கொடியேற்றவே இராணுவ விமானத்தில் பாதுகாப்புடன் சென்று வந்தது நினைவில்லை போல இருக்கிறது.

*கூட்டணிக்கு விரோதமாக குமரி அனந்தன் பேசுகிறார் என்று கூறப்படுகிறது. ஆட்சியை விட்டு யாரையும் இறங்கச் சொல்லி நான் பேசவில்லை. காங்கிரசு கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்றுதான் பேசுகிறேன்.*

*—மருங்காபுரி ஒன்றியத்தில் நடந்த கூட்டத்தில் குமரி அனந்தன்.*

மகளையா சாகச் சொன்னேன், மருமகளைத்தானே தாலியறுக்க வேண்டும் என்றேன் என்ற மாமியார் கூற்றுதான் பளிச்சிடுகிறது.

*அதிபர் எல்சின் ரஷ்யாவை கட்டிக் காப்பார் என நான் என்றுமே நினைத்தது இல்லை. அவர் ரஷ்யாவை விரைவில் அழித்து விடுவார் என்றுதான் நான் நினைத்தேன்.*

*—'மாஸ்கோ நியூஸ்' பத்திரிக்கையில் முன்னாள் சோவியத் ரஷ்ய அதிபர் கோர்ப்பச்சேவ்*

ஈயத்தைப் பார்த்து இளிக்குது பித்தளை!

*''சிறபக்கலை வளர்த்த செம்மல்'' ஆர்.விக்கு தமிழக சிற்பிகளின் ச[illegible]பில் சிறப்புப் பட்டம்.*

*—தினமலர் 15-10-92 செய்தி.*

ஆமாம்! உங்களுக்குத் தெரியுமா? தஞ்சை பிரகதீஷ்வரர் ஆலயம், எல்லோரா -அஜந்தா குகைகளை உருவாக்கியதெல்லாம் நம் ஆர்.வி.தான்!

*மக்களுக்கு அறிவு இல்லாததால் நாடு முன்னேறவில்லை.*

*—தமிழக நிதியமைச்சர் நெடுஞ்செழியன்.*

ஆனவ முதல்வருக்கேற்ற வாய்க்கொழுப்பெடுத்த மந்திரி! தேர்தல் இப்போது இல்லை என்ற தைரியம்!

*டில்லியிலும் இங்கும் (மே.வங்கம்) உள்ள சில காங்கிரசத் தலைவர்கள் வேண்டுமென்றே எங்களுடன் மோதலை தூண்டிவிடுகிறார்கள். மோதல் எதற்கு? இருவரும் வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களல்லவா? மோதலுக்குப் பதிலாக கொள்கைகளிலும் வளர்ச்சிப் பணிகளிலும் மேற்கு வங்க இடதுசாரி அரசும் மற்ற மாநிலங்களை ஆளும் காங்கிரச அரசும் போட்டியிடட்டும்.*

*—சி.ஐ.டி.யு. மாநாட்டில் மே.வ. முதல்வர் ஜோதிபாசு.*

டாட்டாவுக்கும் - பிர்லாவுக்கும் வெளிநாட்டு முதலாளிகளுக்கும் சேவை செய்வதில்தானே போட்டி?! காங்கிரசுடன் போட்டியிட இதற்கு 'மார்சிஸ்டு'களுக்கு நிச்சயம் தகுதியுண்டு.

*உயர் நீதிமன்றம் பைபிளோ கடவுளோ அல்ல.*

*—கட்டக்கில் நடந்த விசச் சாராய படுகொலையைப் பற்றி நீதிமன்ற விசாரணை கமிட்டி அமைத்து விசாரிக்க உத்தரவிடுமாறு தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றத்தை எதிர்த்து ஒரிசா முதல்வர் பிஜு பட்நாயக்.*

தனக்கு பாதிப்பு என்பதால் வேதம் ஓதுகிறது சாத்தான்.

*எம்.எல்.ஏ க்கள் சம்பாரிப்பதிலேயே குறியாக உள்ளார்கள். அவர்களை தேர்ந்தெடுத்த தொகுதி பக்கமே தலைகாட்டுவதில்லை.*

*—மாநில காங்கிரசு கட்சியைப் பற்றி முன்னாள் கர்நாடக முதல்வர் வீரேந்திரபாட்டீல்.*

அதிருப்தி கோஷ்டியில் உள்ளவரைக்கும் இவர் உண்மை விளம்பி!

*நானோ பண்ருட்டியாரோ அமைதியா மறியல் பண்ணி கைதானாக்கூட தொண்டர்கள் சும்மா இருக்க மாட்டேங்கிறாங்க. அப்புறம் 'பா.ம.க. வன்முறை'ன்னு நீங்க எழுதுவீங்க, எதுக்கு வம்புன்னுதான் இந்தமுறை ரெண்டு பேரும் கட்சியிலேயே பேசி விதிவிலக்கு வாங்கிவிட்டோம்.*

*—பெட்ரோல், டீசல், உர விலை உயர்வுக்கு எதிராக பா.ம.க. நவம். 16ந் தேதி நடத்திய மறியலில் ராமதாசும் பண்ருட்டியும் கலந்து கொள்ளாதது பற்றி நிருபர்களிடம் ராமதாசு.*

அருமையான கட்சி! நல்ல முடிவு! வாழ்த்துவோம். அதுசரி 'தமிழினப் போராளி' என்ற பட்டத்தை கொஞ்ச காலம் அலமாரியில் பூட்டிவைக்கப் போகிறாரா?

படிப்பகம்

www.padippakam.com

# நச்சுக் காளானாக நவீன நாஜிகள்

கடந்த ஆகஸ்டு 22 இரவு, கிழக்கு ஜெர்மனியில் ரோஸ்டாக் மாவட்டத்தில் லிக்டென் ஹேகன் நகரில் நூறுபேருக்கும் மேலான ஒரு கூட்டம் ஆரவாரமாகச் சென்றது. கருப்பு நிற தோல் வெளிச் சட்டை, கனத்த பூட்சுகள், நீல நிற ஜீன்ஸ் பேண்ட் அணிந்த, மொட்டைத் தலையர்கள் அகதிகள் புகலிட விடுதியொன்றை அணுகிக் கொண்டிருந்தனர். ''எங்கள் பணத்தில் போலி அகதிகள்'', ''ஜெர்மனி ஜெர்மானியருக்கே'', ''வெளிநாட்டானே வெளியேறு'' என்று பலப்பல முழக்கங்களோடும், கேவலமான இழிவான பேச்சுக்களோடும் கூட்டம் முன்னேறிக் கொண்டிருந்தது. நாஜிச ஸ்வஸ்த்திக் சின்னமும் வலது கையை உயர்த்திய நாஜிச முழக்கமும் அவர்களை புதிய நாஜிகள் என்று எடுத்து காட்டின. அகதிகள் புகலிட விடுதி மீது பெட்ரோல் குண்டுகளை வீசினர். கார்கள் இன்னபிற என்று கிடைத்ததையெல்லாம் தீக்கிரையாக்கினர். மரத்தாலான அகதிகளின் அறைகள் தீயினால் நாசமடைந்தன. அலறியடித்துக் கொண்டு அகதிகள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தனர்.

இதேசமயம் ரோஸ்டாக்கில் ருமேனிய ஜிப்ஸிகள் தங்கியிருந்த 10 மாடி புகலிட விடுதி 3 இரவுகள் தொடர்ச்சியாக தாக்கப்பட்டது. கோட்பஸ், கிரைப்ஸ்வால்டு, கோபெலென்ஸ், ஐசன் ஷுட்டென்ஸ்டாட், லியுபென்கெள, ஹநாவ் ஆகிய இடங்களிலான அகதிகள் புகலிட விடுதிகள் எரிகுண்டுகளால் தாக்கப்பட்டன. பரேன்கல்லா புகலிட விடுதியைச் சேர்ந்தவர்கள் நகரத்திற்கு இட்டுச் செல்லப்படுகையில் அவர்களது பஸ் தாக்கப்பட்டது.

அகதிகள் மட்டுமல்ல, ஜெர்மன் நாட்டில் குடியேறிய வெளிநாட்டவர்களில் ஐரோப்பிய வெள்ளை நிறத்தினர் அல்லாதோர் தாக்கப்பட்டனர்.

யூதர்களும் தாக்கப்பட்டனர். வுப்பர்டல் நகரத்தில் யூத கல்லறைகள் 190-ல் 90 பெயர்த்து அழிக்கப்பட்டன. ஆரிய இன வெறி நாஜிசத்தின் நிறுவனரான இட்லரால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட 10,000 யூதர்கள் நினைவாக எழுப்பப்பட்ட சாக்சன் ஹாசன் நினைவுக்கூடம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. இது போன்று பல இடங்களில் யூத கல்லறைகள் அழிக்கப்பட்டன.

ஆக, ரோஸ்டாக் - ஹோயெர்ஸ் எர்டா மாவட்டங்களில் (கிழக்கு ஜெர்மனி) மட்டும் புதிய நாஜிகள் ஆகஸ்டு - செப்டம்பர் மாதங்களில் 15-க்கும் மேலான நகரங்களில் கொடூரமான தாக்குதல்களில் ஈடுபட்டனர். 100 முதல் 1,000 பேர் வரை கூட ஒரு தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். பணி நேரத்தில் இல்லாத போது சில ஜெர்மன் இராணுவ வீரர்கள் புதிய நாஜிகளுக்கு பயிற்சி அளித்தது, தாக்குதலில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளன. இரு அதிகாரிகள் உட்பட 24 இராணுவத்தினர் புகலிட விடுதிகள் மீதான 9 தாக்குதல்களில் ஈடுபட்டதை இராணுவ அமைச்சகம் உறுதிபடுத்தியது.

புதிய நாஜிகளின் இத்தாக்குதல்கள் முன்கூட்டியே திட்டமிட்டு ஒருங்கிணைந்த முறையில் கட்டவிழ்த்து விடப்பட்டவை. சிட்டிஸன்ஸ் பேண்டு ரேடியோ என்னும் தனியார் வானொலி நிலையத்தின் மூலமாக நவீன நாஜிகள் கலகக்காரர்களுக்கு உத்திரவிட்டுள்ளனர். 4,200 மொட்டைத் தலையர்களை தீவிர உறுப்பினர்களாகவும் 40,000 உறுப்பினர்களைக் கொண்ட 76 புதிய நாஜிச அமைப்புகள் இருப்பதாக ஜெர்மன் அரசு கூறுகிறது.

1990-ல் 1,483, 1991-ல் 2,363 என்று இருந்த இத்தாக்குதல்கள் இவ்வருடம் அதி

நாஜி இனவெறிக்கு எதிராக கலவரப்பகுதியில் எதிர்க் கட்சிகளின் ஊர்வலம்




கரித்துள்ளன, தீவிரமடைந்துள்ளன
காப்பு ஏற்பாடுகளை பல மடங்கு உ
யதாக ஜெர்மன் அரசு கூறியபோது
புள்ளிவிவரங்கள் அதிர்ச்சியூட்ட
யலை. ஜெர்மனி ஐக்கியப்பட்ட தி
ஆண்டு நிறைவு காலத்தில்தான் பெ
வில் தாக்குதல் நடத்தப்படுகின்றன.

ஜெர்மனியில், அதிலும் கிழக்கு
மனியில் இந்த மிருகத்தனமான நட
கைகள் ஓங்கியிருப்பதற்கு மிகவும்
மான நிலைமைகள் இருப்பதே கா
மேற்கு - கிழக்கு ஜெர்மனி இ
தலைநகர் பெர்லினுக்கு மாற்றம்,
குடா யுத்தத்திற்கு தந்த விலை, ரஷி
கும் கிழக்கு ஐரோப்பிய நாடுக
தரும் உதவி (கடன்) ஆகியவற்
தமது மக்கள்மீது ஜெர்மன் அரசு
மையை ஏற்றிவிட்டது. ''இணைப்
முன்னும் பின்னும் கிழக்கு ஜெர்ம
அவல நிலையை சீர்படுத்துவதாக
களின்போது ஆளும் கட்சி கூ
ஆனால், அங்கு மேற்கைவிட தனிநப
மானம் மூன்றில் ஒரு பங்கே இரு
வேலையின்மை 50%, உயரும் விலை
வீட்டு வாடகை உயர்வு, வீடில்லாத்
டாட்டம் ஆகியன கிழக்கு ஜெர்மனி
ளின் மோசமான வாழ்க்கைத் தரத்தை
துக் காட்டுகின்றன. மக்களிடையே ந
நாஜிசம் என்னும் விஷக்காளான் வி
கப் பரவுகிறது.

'அகதிகளை பராமரிப்பதே வ
றத்திற்குக் காரணம், உள்நாட்டு
வாய்ப்பை வெளிநாட்டோர் எ
கொள்வதே வேலையின்மைக்குக்
ணம், அகதிகளால் நாட்டின் சுத்தம்,
ஒழுங்கு, கலாச்சாரம் அழிந்து வருகி
குற்றங்கள் மலிந்து வருகின்றன.
வெங்கும் சுற்றித் திரியும் ஒட்டுண்ணி
(அகதிகளை) சொந்த நாட்டுக்கு ஓட்
வேண்டும். தாம் வறுமையில்வாட
யாக வாழவந்துள்ள வெளிநாட்ட
விரட்டிட வேண்டும், நாட்டை தூய்ம
டுத்த வேண்டும் என்று புதிய நாஜிகள்
சாரம் செய்கின்றனர்.

புதிய நாஜிகளின் பிரச்சாரம் ஜெ
யில் நன்கு எடுபடுகிறது. நவீன நாஜ
தாந்தத்தைக் கொண்ட கட்சிகள் நகர
சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல்
வெற்றிபெற்று வருகின்றன. இவ
எதிர்த்து வந்த ஆளும் வலதுசாரி அர
கட்சிகள் தற்போது எதிர்ப்பைக் கைவ
இவற்றின் மறைமுக ஆதரவுடன்தான்
தல்களில் வெல்ல முடியும் என்ற நி
வந்துவிட்டன. தமது புதிய தேர்தல்
யாக, அகதிகள் - வெளிநாட்டவர்
னையையே முன்வைக்கின்றன. இ
பந்தமான சட்டங்களை திருத்து
எதிர்த்து வந்த எதிர்க்கட்சிகள் கூட
போது ஆளும் கட்சிகளுடன் இந்த
னையில் சமரசமாக போகின்றன.

அதே சமயம் நவீன நாஜிகளி
போதைய கொடூரத் தாக்குதல்களை -
வான வன்செயல்களைக் கண்டித்து ஜ
யக சக்திகளாக காட்டிக்கொள்ள, ஆ
கிறிஸ்துவ ஜனநாயகக் கட்சியும், எதி



படிப்பகம்

www.padippakam.com

சியான ஜனநாயக சோசலிச கட்சியும் தமது தொழிற்சங்கங்களின் பலத்துடன் முறையே 5,000, 15,000 பேர் கொண்ட நாஜிச எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்திக்காட்டின. அதிபர் ஹெல்மட் கோல், உயரதிகாரிகள், இஸ்ரேலிய மந்திரி புடைசூழ, ஜெர்மன் ஜனநாயகத்திற்காக சவாலடித்து பேசினார். ஆனாலும் இவர்களது நடைமுறை நவீன நாஜிகளுக்கு மறைமுக ஆதரவாகவே உள்ளது.

புகலிடத்திற்கு விண்ணப்பிப்பவர்களில் 7%க்கும் குறைவாகவே ஏற்கப்படுகின்றனர். சொந்த நாட்டுக்குத் திரும்பினால் உயிர், உடமைகளுக்கு உத்திரவாதம் இல்லாதவர்கள் அரசியல் தஞ்சம் அளிக்கப்பட வேண்டியவர்கள் என்ற சட்டம் (ஜெனிவா உடன்படிக்கை 1951ஐ அடிப்படையாகக் கொண்டது.) விதிவிலக்கான, மிகக்குறைவானவர்களுக்கே கடைபிடிக்கப்படுகிறது. இச்சட்டம் கூறும் அபாயகர நிலைமைகள் இருக்கும்போதுதான் குர்தீஷ் அகதிகள் திருப்பியனுப்பப்பட்டனர். யூகோஸ்லாவிய அகதிகள் வலுக்கட்டாயமாக கொண்டு சென்று விடப்படுகின்றனர். ருமேனிய ஜிப்சிகளுக்காக அந்நாட்டு அரசுடன் பேசப்பட்டு வருகிறது. ஒரு லட்சத்திற்கும் மேலான போஸ்னியா முஸ்லீம்கள் இப்போது நிர்க்கதியாக நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

அகதிகள் தனித்து, ஒதுக்குப்புறமாக, கைவிடப்பட்ட பழைய கட்டிடங்கள், இராணுவ வீரர்கள் தங்கிய பழைய முகாம்கள் என்றவாறு குடியமர்த்தப்படுகின்றனர். பலகைகளால் அமைத்துத் தரப்படும் அறைகள் எளிதில் நாஜிகளின் தீக்குண்டுகளுக்கு இரையாகின்றன. அற்ப உடமைகளுக்கும் உயிருக்கும்கூட உத்திரவாதமில்லை. இவ்விடுதிகளை விட்டு வேறு இடங்களுக்கோ, வேலைக்கோ செல்ல முடியாது. பல்வேறு வகையான இன, நிறவாத பாகுபாட்டுக்கு உள்ளாவதால் உளவியல் ரீதியான சித்திரவதைக்கு ஆளாகின்றனர். சிலர் மனநோய் மருத்துவ மனையிலும் சேர்க்கப்படுகின்றனர். குடிவாசிகளான வெளிநாட்டவர்கள் கூட, எந்த நேரத்தில் எந்த மூலையில் மூர்க்கத்தனமான தாக்குதல் ஏவப்படுமோ என்ற பயத்தில் பணியாற்றுகின்றனர். இது ஒரு உளவியல் ரீதியான கொலையே.

இந்த கொடிய அடக்குமுறைக்கு போலீசின் மறைமுகமான ஒத்துழைப்பு இருப்பது ஜெர்மன் அரசின் இனவெறியை இனங்காட்டுகிறது. வன்முறையாளர்கள் மீது உரிய பிரிவுகளில் வழக்குகள் தொடுப்பதில்லை. தாக்குதல்களில் எவ்வளவு பேர் எந்த வகையில் பாதிக்கப்பட்டனர் என்பது வெளியிடப்படுவதில்லை.

ஜெர்மன் அகதிகளுக்கு தஞ்சம் தரும் சட்டமும் வெளிநாட்டவர்கள் பற்றிய சட்டமும் இன்றைய சூழ்நிலையில் அவசியமற்றதாக உள்ளது. ஐரோப்பாவைக் கவ்வியிருந்த ''கம்யூனிச பூதத்திடமிருந்து'' தப்பிவர ஊக்கப்படுத்தவும், ஜெர்மன் நாஜிசத்தால் ஏற்பட்ட அவப்பெயரைத் துடைத்துக் கொள்ளவும் அகதிகளுக்குத் தஞ்சம் தருவது மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது



''இனி நாங்கள் எங்கே போவோம்?'' — நாஜிகளின் தாக்குதலால் மரணபீதியில் அலறியடித்துக் கொண்டு ஓடிவரும் அகதி.

உலக யுத்தத்தில் நாசமாக்கப்பட்ட பின்னர், தொழில் வளர்ச்சிக்கு பற்றாக்குறையாக இருந்த தொழிலாளர்கள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டனர். மேற்கு ஜெர்மனியின் பொருளாதார வளர்ச்சிக்கு இவர்களது பங்கு குறிப்பிடத் தகுந்ததாகும். இவர்கள் 1973-லிருந்தே கட்டுப்பாடுகள் நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகின்றனர். தாமே வெளியேறும் திட்டத்தின்கீழ் சொந்த நாடுகளுக்கு சென்றுள்ளனர். தற்போது 50 லட்சம் வெளிநாட்டவர்கள் இருப்பதாக அரசு தெரிவிக்கிறது.

ஏழை, பின்தங்கிய நாடுகளிலிருந்து, இனக்கலவரங்கள், தேசிய இனப் போராட்டங்கள், பாசிச மற்றும் இராணுவ சர்வாதிகார குழுக்களின் தாக்குதல்கள் காரணமாக வரும் அகதிகளான வியட்நாமியர்கள், இலங்கைத் தமிழர்கள், குர்தீஷ் மக்கள், யூகோஸ்லாவியர்களால்தான் தமது கஜானா வற்றிவருவதாக ஜெர்மன் அரசு கூறுகிறது. ஆனால், வளைகுடா யுத்தச் செலவு மற்றும் தமது இராணுவ பலத்தை அதிகரித்து வருவதற்குக் கொட்டப்படும் லட்சக்கணக்கான கோடி ரூபாய்களினால்தான், நவீன தொழிலுற்பத்தி முறைகளில் லாபத்திற்காக கையாளும் கொள்கையினால்தான் வரியேற்றமும் வேலையின்மையும் விளைவிக்கப்படுகின்றன. மக்களை இந்த உண்மையிலிருந்து திசைதிருப்பவே அகதிகள் - வெளிநாட்டவர் பிரச்சினை உசுப்பிவிடப்படுகிறது.

நாஜிசத்தின் மறு உயிர்ப்புக்கு வெள்ளை நிற இனவெறிதான் அடிப்படையாகும். இனத்தூய்மைக்கான நடவடிக்கையாக இந்த கொடிய தாக்குதல்களை சித்தரிக்கின்றனர், புதிய நாஜிகள். ''ஒரு கறுப்பரோ, ஒரு அராபியரோ, ஒரு ஜிப்சியோ, கலக்காத அந்நிய அடையாளங்கள் எதுவுமில்லாத ஒரு தூய சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்'' என்கிறான் ஒரு நவீன நாஜி. லாப நோக்கத்திற்கான நவீன தொழிலுற்பத்தி முறையில், நகர்ப்புறங்களில், நிரந்தரமாக சமூகத்தின் வேண்டாத கசடாக ஒரு கூட்டத்தினர் ஏற்பட்டுவிடுகின்றனர். கடத்தல், மஃபியா போன்று பல சமூக விரோத குற்றங்களுக்கும் இது செறிவான பிரிவாக இருப்பது போன்றே, வெள்ளை நிற இனவெறிக்கும் வர்க்க அடித்தளமாக இருக்கின்றது. பாட்டாளி வர்க்க கட்சி இல்லாததும் இந்நச்சுக் காற்று விரைவாக பரவும் சூழ்நிலையைத் தருகிறது.

நவீன நாஜிகள் ஜெர்மனியில் மட்டுமல்ல, பிற மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் இருக்கிறார்கள்; அந்நாடுகளிலும் வலுவடைந்து வருகிறார்கள். சில நாடுகளில் இரகசிய குண்டர் படைகளையும் நிறுவியுள்ளார்கள். எனவே புதிய நாஜிச அபாயம் மேற்கு ஐரோப்பியாவின் பொதுப் பிரச்சினையாகி வருகிறது. ஒரே நாடாக விழையும் ஐரோப்பிய பொதுச் சமூகத்தின் உறுப்பு நாடுகளுக்கும் வெள்ளை நிற, இனவெறி என்பது அடித்தளத்தில் உள்ளது. உலகிலேயே முதல் பொருளாதார மேல்நிலை வல்லரசாகத் திகழும் ஐரோப்பிய பொதுச் சமூகத்தின் வளர்ச்சி, மேல்நிலை வல்லரசின் அனைத்து இழிந்த நடவடிக்கைகளுடன் அது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மாறக்கூடும்.

அகதிகளின் வாழ்வுரிமையை வலியுறுத்துவதும், ஏகாதிபத்தியவாதிகளின் போலித்தனமான ஜனநாயக நாடகத்தையும் அதனுள்ளே நீடுநிரவியுள்ள வெள்ளை இன வெறியையும் அம்பலப்படுத்துவதும், ஜனநாயகவாதிகள் - கம்யூனிசப் புரட்சியாளர்களின் கடமையாகும். புதிய நாஜிசத்தின் வேர்களை களைந்தெறியும்வரை தீராத அரசியல் போராட்டமும் தற்காப்பு ஏற்பாடுகளும் தவிர்க்க முடியாதவை.

● உதயணன்

படிப்பகம்

www.padippakam.com

# கருத்துக் களஞ்சியம்

## அன்னிய முதலீடுக்கு பாய் விரிக்கும் புதிய பொருளாதாரக் கொள்கை

**விரியத்திற கதவுகளை!**

◆ புதிய தொழிற்கொள்கை அறிவிப்புக்குப் பிறகு, அரசு அனுமதித்துள்ள அன்னிய முதலீடு மொத்தம் ரூ 4200 கோடி.

◆ 1992 ஜூனுடன் முடிந்த நிதி ஆண்டில் ரூ 1954 கோடிக்கு அன்னிய முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் அனுமதிக்கப்பட்டதற்கு இது 12 மடங்கு அதிகம்.

◆ 1992 நிதியாண்டில் வெளிநாட்டு நிறுவனங்கள் நேரடி அன்னிய முதலீடு திட்டத்தின் கீழ் செய்த முதலீடு ரூ 600 கோடி.

◆ ஜப்பானிய பகாசுரக் கம்பெனி இடோ நம்நாட்டில் ரிலையன்ஸ் தொழிற்சாலைகள் இரண்டில் ரூ 150 கோடி முதலீடு செய்துள்ளது. இதுதான் இந்தியாவில் நேரடி வெளிநாட்டு முதலீட்டில் மிகப்பெரியதாகும்.

◆ ஜப்பானின் பெரும் பன்னாட்டு தொழில் கழகமான ஹிடாச்சி, மின்மாற்றிகள் - மின் சாதனங்களை உற்பத்தி செய்யும் கேரள அரசு நிறுவனத்தில் (TELK) ரூ 8 கோடி முதலீடு செய்துள்ளது.

◆ இந்தியா இதுவரை 3 கட்டங்களில் மூலதனச் சந்தையை திறந்துவிட்டுள்ளது. முதலாவது, வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் (NRI) முதலீடுகள். இரண்டாவது, ஐரோப்பிய மாற்றுகள் மற்றும் உலகரீதியான வைப்பு நிதி வரவுகள் மூலமான முதலீடுகள்; மூன்றாவது நேரடி வெளிநாட்டு முதலீடுகள்.

◆ ஜப்பானின் ஹோண்டா, தனது இந்திய ஹோண்டா நிறுவனத்தில் தனது முதலீட்டை 29% லிருந்து 60% ஆக உயர்த்தியது.

◆ இத்தாலியின் பியட், டிராக்டர்கள் உற்பத்தி செய்யும் எஸ்கார்ட்ஸ் நிறுவனத்திலும் அசோக் லேலண்ட் நிறுவனத்திலும் முதலீடு செய்துள்ளது. தற்போது கார்கள் உற்பத்திக்காக முதலீடு செய்ய உள்ளது.

**கை நிறைய கடன்வாங்கு!**

◆ சர்வதேச நாணய நிதியகம் (IMF - ச.நா.நி) 1991 அக்டோபரில் இந்திய அரசுக்கு ரூ6900 கோடி கடனை இரு வருட காலத்தில் தர சம்மதித்தது. செப்டம்பர் 92 வரை அனுமதித்த தொகை ரூ 2040 கோடி. 3 மாதங்களுக்கு ஒரு முறை என்று ச.நா.நி. பரிசீலித்து தவணைத் தொகையைத் தீர்மானிக்கிறது. 1993 ஜூனுக்குள் இந்தியா ரூ 4860 கோடிக்கு அனுமதி பெற காத்து கிடக்கிறது.

◆ 1993-'95 காலத்திற்கு இந்தியா ச.நா.நி. இடம் ரூ 21,000 கோடி கடன் தருமாறு கோரிவருகிறது. அதாவது 91ம் வருடத்திய அனுமதியைப் போல் 3 மடங்கு கடனுக்கு கோரிக்கை வைத்துள்ளது.

◆ உலக வங்கி சிமெண்ட் தொழிலுக்காக ரூ 1500 கோடி கடன் அளித்துள்ளது.

◆ கொங்கன் ரப்பர் திட்டத்திற்காக உலக வங்கி ரூ 450 கோடி கடன் தந்துள்ளது.

◆ 1992-ல் ஜெர்மனி இந்திய அரசுக்கு அளித்த கடன் ரூ.710 கோடி ஆகும். 1993-ல் ரூ.790 கோடி அளிக்க உத்தேசித்திருப்பதாக தெரிகிறது.

◆ மிட்சுயி என்னும் ஜப்பானின் தேசங்கடந்த தொழில் கழகம் இந்திய இரும்பு மற்றும் எஃகு நிறுவனத்தை (அரசுத்துறை) நவீனப்படுத்த, அரசு முன்மொழியும் தனியார் நிறுவனத்திற்கு ரூ 3000 கோடி கடனளிக்க இசைந்துள்ளது.

◆ இந்திய அரசு வைத்துள்ள மொத்த அன்னியக் கடன் ரூ 2,40,000 கோடி.

**தாராள சலுகைகள் வழங்கு!**

◆ இந்திய அரசு வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்களுக்கு (FIS) சில சலுகைகளை செப்டம்பர் 14, 1992 அன்று அறிவித்தது. இதன்படி பரஸ்பர நிதிகள், ஓய்வூதிய நிதிகள், முதலீட்டு கழகங்கள் (டிரஸ்டுகள்) மற்றும் சொத்துக்களை நிர்வகிக்கும் நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய அனுமதிக்கப்படும். சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவை அனுமதிக்கப்படும்.

◆ நீண்ட கால வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீடுகளுக்கு 10% வரிச்சலுகை அளிக்கப்படும்.

◆ செப். 15, 1992-ல் இந்திய அரசு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தமது நெருங்கிய உறவினர்களுக்கு முதலீட்டுப் பங்குகளை நன்கொடையாக அளிப்பதற்கான விதிமுறைகளை தளர்த்தியது. இனி இப்பங்குகள் அன்னியச் செலாவணி வரன்முறைச் சட்டத்திற்கு (FERA) உட்படுத்தப்படமாட்டா.

◆ இதுகாறும் புதிய தொழிற் கொள்கையில் இணைப்பு III ல் வரையறுத்த 33 தொழிற்துறைகளுக்கும், 51% வரையிலான முதலீட்டுப் பங்கேற்புக்கும் அன்னிய முதலீட்டுக்கு உடனடியாக (automatic) அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

**அதிக விலையா? நிதி மோசடியா? கண்ணை மூடிக்கொள்!**

◆ ஆசிய பிரவுன்பௌரி என்ற ஸ்வீடனின் தேசங்கடந்த தொழில் கழகத்திற்கு ரூ 570 கோடிக்கு இரயில் இன்ஜின்கள் ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆர்டருக்கு பாதகமாக எந்த முடிவும் எடுக்க வேண்டாம்; அப்படி எடுத்தால், அடுத்து வரும் 4 வருடங்களில் இந்தியாவில் அந்த பகாசுரக் கம்பெனி ரூ 4000 கோடி முதலீடு செய்ய உள்ள திட்டங்கள் பாதிக்கக் கூடும்; இவ்வாறு பிரதமர் அலுவலகம் ரயில்வே/அமைச்சகத்திற்கு பணித்திருப்பதாக செய்தி கசிந்துள்ளது.

**அறுவை சிகிச்சை வெற்றி! ஆனால் நோயாளி?**

◆ ச.நா.நி.ல் ஒரு நாட்டின் பொருளாதார வலிமையைக் கொண்டு அதற்கு ஒதுக்கீடும் அதை ஒட்டி அதன் ஓட்டு வலிமையும் தீர்மானிக்கப்படுகிறது. மொத்த தேசிய உற்பத்தி, அன்னிய வர்த்தகம், மற்றும் பிற என்று பல்வேறு அம்சங்களைக் கணக்கில் கொண்டு இது தீர்மானிக்கப்படுகிறது. ச.நா.நி. இன் ஆரம்ப ஆண்டுகளில் முதல் ஐந்தில் ஒன்றாக இந்தியா இருந்தது. பின்னர் சிறிது சிறிதாக வரிசையில் பின்தங்க ஆரம்பித்தது. 1992 நவம்பர் 12-இல் அமுலுக்கு வந்த புதிய ஒதுக்கீட்டில் இந்தியா 13-ஆவது நாடாக தாழ்ந்துள்ளது. அதன் தற்போதைய ஓட்டு வலிமை மொத்தத்தில் 2.05% ஆகும். ●






படிப்பகம்

www.padippakam.com

வட கொரிய அதிபர் கிம் இல் சுங் தனது பொறுப்புகளையும், அனைத்து அதிகாரத்தையும், தனது மகன் ஜிம்ஜாங்குக்கு மாற்றிக் கொடுத்துள்ளார். கட்சி அமைப்பில் தேர்தல்கள் நடைபெற்று, சனநாயகபூர்வமாக தேர்ந்தெடுக்கப் படுவதற்குப் பதில், இப்போலி கம்யூனிச தலைவர் நமது நாட்டு ஓட்டுப் பொறுக்கி அரசியல் தலைவர்களைப் போல, வாரிசுரிமை ஆட்சிக்கு அடி கோலியுள்ளார். இடது, வலது போலிகள் இதையும் சோசலிச நடவடிக்கை என நியாயப்படுத்தினாலும் ஆச்சரியமில்லை!

ஜெர்மனியிலிருந்து 1300 டன் எடையுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை ஏற்றிக் கொண்டு, இந்தியாவுக்கு புறப்பட இருந்த கப்பலை, ஜெர்மனியின் சுற்றுப்புற விவகார கமிட்டி தடுத்துவிட்டது. இக் கழிவுகளை மீண்டும் உபயோகப் படுத்துவதற்கு இதுவரை எந்த தொழில் நுட்பமும் கண்டுபிடிக்கப் படாத நிலையில் இந்தியாவிற்கு எடுத்து வருவது, இரசாயனக் கழிவுகளின் குப்பைத் தொட்டியாக நமது நாட்டையும் ஆக்க முயலும் சதிச் செயல்தான் என்பது இதன் மூலம் அம்பலமாகியுள்ளது!

சென்னை பெருநகரில் மட்டும் வருடத்திற்கு 1000 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். தற்கொலைக்கு முயல்வோர் இது போல் 15 மடங்காகும். பெண்களை விட ஆண்களே அதிகமாக தற்கொலை செய்து கொள்கின்றனர். சமீபகாலங்களில் கடன் தொல்லை காரணமாக, குடும்பத்துடன் மாய்த்துக் கொள்வது அதிகமாகியுள்ளது. உணர்ச்சி மயப்படுதலும், மனக் குழப்பங்களும், தங்களின் பிரச்னைகளை இச்சமூக அமைப்பிற்குள் தீர்த்துக் கொள்ள முடியாமையும் தற்கொலைக்கு காரணமாகின்றன. தலைநகரிலே இப்படி நடந்தும், அரசு எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கத் தயாராக இல்லை.

சுலாஹ் - இமாச்சல பிரதேச முதல்வரின் தொகுதி. இங்குள்ள கை பம்பிலிருந்து வரும் நீர், நோய்களைக் குணப்படுத்தும் அதிசய சக்தி கொண்டது என்ற வதந்தியைப் தனது அரசியல் லாபம் கருதி பரப்பி வருகிறது பி.ஜே.பி. கும்பல். 'குடிப்பதற்கு ஏற்ற சாதாரன நீர்தான்' என ஆய்வக அறிக்கைகள் தெளிவுபடுத்திய பின்னும், அரசு இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காததுடன், தனது சுற்றுலாத் துறையின் மூலம் ஒரு சிற்றுண்டிச சாலையை திறந்துள்ளது!

தலைமை தேர்தல் அதிகாரி சேஷன், கீழ்நிலை ஊழியர்களிடம் எப்பொழுதும் சர்வாதிகாரி போலவே நடந்து வருவார். பத்து நிமிடம் தாமதமானால் கூட, சம்பள வெட்டு எனும் அளவுக்கு அதிகாரத் திமிர் கொண்டவர். சம்பவ தினத்தன்று, ஷீலா தேவி என்ற பெண் ஊழியர் தனது சகோதரனுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு எரிச்சலடைந்து, அவரையும், அருகிலிருந்த மற்ற இரு ஊழியர்களையும் காவல்துறை மூலம் கைது செய்ய முயற்சித்துள்ளார். இதனை அறிந்த பிற ஊழியர்கள் அனைவரும் அலுவலகம் முன்பு திரண்டு, 'சர்வாதிகாரி சேஷன் ஒழிக' என கோஷமிட்டு மறியல் செய்துள்ளனர். அரண்டு போன சேஷன் மன்னிப்புக் கேட்கவே, போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

ஜப்பான், பிரான்சிடமிருந்து 1.7 டன் எடையுள்ள செறிவூட்டப்பட்ட புளோட்டோனியத்தை வாங்கி, பலத்த பாதுகாப்புடன் கடல்வழி மூலம் எடுத்துச் செய்கிறது. இதை எதர்த்து, உலகெங்கிலுமுள்ள சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு இயக்கத்தினர் பல்வேறு போராட்டங்களை எடுத்து வருகின்றனர். இராணுவரீதியாக தன்னை வலுப்படுத்திக் கொள்ளவே, உலகிலேயே முதன் முறையாக இவ்வளவு அதிக அளவில் புளோட்டோனியத்தை ஜப்பான் வாங்கிச் செல்கிறது. 'அணு ஆயுதப் பரவல் தடுப்பு' என சமாதான வேடம் போடும் பிற ஏகாதிபத்தியங்கள் ஜப்பானின் பொருளாதார வலிமையின் காரணமாக, இதை எதிர்க்கத் துணியவில்லை.

முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்ற பால்டிக் நாடுகளிலிருந்து ரஷ்யத் துருப்புகளின் வெளியேற்றம் நிறுத்தப்பட்டவிட்டது. இந் நாடுகளில் வாழும் சிறுபான்மையினரான ரஷ்யர்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன; ரஷ்யர்களின் நலன்காக்கவே அங்கு ராணுவம் நிறுத்தப் பட்டுள்ளது எனக் காரணம் கூறுகிறது யெல்சின் அரசு. சுதந்திர காமன்வெல்தின் பிற உறுப்பு நாடுகள் மற்றும் பால்டிக் நாடுகள் மீது ரஷியா காட்டும் 'பெரிய சகோதரத்தனம்', தனது மேலாதிக்க பண்பை அதுஇன்னும் விட்டுவிடவில்லை என்பதையே காட்டுகிறது.

ஜப்பானின் புளூடோனியக் கப்பலுக்கு எதிர்ப்பு தெரிவித்து மணிலாவில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்




இந்தியாவில் தயாராகும் சாக்லெட்டுகளில் அனுமதித்த அளவைவிட 400 மடங்கு அதிக அளவில் ''நிக்கல்'' எனும் உலோகக் கலவை உள்ளதாகவும் இது உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கக் கூடியதென்றும் அறிக்கைகள் வெளிவந்துள்ளன. இதற்காக 11 கம்பெனிகள் தயாரிக்கும் சாக்லெட்டுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரச்னை சம்பந்தமாக, ஆக.3-ல் ஒரு கருத்தரங்கத்திற்கு ஏற்பாடு செய்திருந்த மத்திய அரசு, போராடும் அமைப்புகளுக்கு அழைப்பு அனுப்பாததுடன் தனது சுகாதார அமைச்சகத்தின் மூலம் 'இந்திய சாக்லெட்டுகள் தீங்கற்றவை' என்ற நற்சான்றிதழையும் வழங்கியுள்ளது. இதனிடையே, 'காட்பரி' கம்பெனி ஆகஸ்டு 3-க்கு முன்னர் தயாரித்து விற்பனைக்கு வந்த தனது எல்லா தயாரிப்புகளையும் கள்ளத்தனமாக திரும்ப பெற்றுக் கொண்டுவிட்டது. கருத்தரங்கம் நடத்தி வீண்ஜம்பம் அடித்துள்ள அரசு, ரூ.125 கோடிக்கான வருமானம் இத்துறையில் இருப்பதனால், இக்கம்பெனிகளுக்கு எதிராக ஒரு சிறு துரும்பைக்கூட அசைக்கவில்லை.

பெட்ரா கெல்லி - ஜெர்மனியில் இயங்கும் பசுமைக் கட்சியை நிறுவியவர்களுள் ஒருவர். இக்கட்சி, பெண்ணுரிமை, சுற்றுப்புறச்சூழல், அணு ஆயுத பரவல் போன்ற சமூகப் பிரச்னைகளுக்காக தீவிரமாக போராடும் அமைப்பு. இரசாயனக் கழிவுகள் சுற்றுப்புற சூழலை மாசுப்படுத்துவதை எதிர்த்து இது போன்ற இயக்கங்கள் மேலை நாடுகளில் நடத்திய போராட்டங்களினால், ஏக போக நிறுவனங்கள் அஞ்சி நடுங்குகின்றன. கடந்த அக்டோபர் முதல் வாரத்தில், கெல்லி மற்றும் அவரது நெருங்கிய நண்பரும், இயக்கத்தின் தீவிர உறுப்பினருமான பாஸ்ட்டியன் - இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சம்பவம் நடந்து மூன்று வாரங்கள் கழித்துத்தான், சடலங்கள் பான் நகரில் பூட்டிய வீடு ஒன்றினுள் கண்டெடுக்கப்பட்டன. பாஸ்ட்டியன், கெல்லியை சுட்டு விட்டு, தானும் சுட்டுக் கொண்டிருக்கலாம் எனக் கூறும் போலீசார், இதனை 'கொலை' என பதிவு செய்யவே மறுத்து வருகின்றனர். 'புதிய நாஜிகள்' செய்திருக்கக் கூடும் என ஒரு சாரர் கூறினாலும், தமக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய இவரை, ஏகபோக நிறுவனங்களே தனது அடியாட்களைக் கொண்டு கொன்றிருக்க வாய்ப்பு அதிகமுண்டு.

சோவியத் யூனியன் சிதறுண்டு போனதில் ஆதாயம் அடைபவர்கள் ஜெர்மன் கறுப்புச் சந்தைக்காரர்கள்தான். இவர்கள் சோவியத் குடியரசுகளில் இருந்து போலந்து வழியாக செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைக் கடத்தி விற்று வந்தது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com






# இதுதான் இன்றைய இந்தியா

இதோ, கட்டிடங்களையும் அவை உள்ள பகுதியையும் மேற்பார்வையிடுகிறாரே ஒருவர். அவர் நமது நாட்டின் மூத்த அமைச்சரோ அல்லது அதிகாரியோ அல்ல. இந்தியா போன்ற வறிய மூன்றாம் உலக நாடுகளை 'கடன்', 'மான்யம்', 'உதவி' என்ற பெயரில் ஏகாதிபத்தியங்கள் கொள்ளையடிக்கத் துணை போகும் உலக வங்கியின் தலைவர், பிரஸ்டன். தாங்கள் கூறியுள்ளபடி பொருளாதார மாற்றங்களைச் செய்து வருகின்றார்களா, வங்கி அனுமதித்துள்ள திட்டங்கள் உரிய முறையில் நடைபெறுகின்றனவா என்பதனை மேற்பார்வையிடுவதற்காக, ஐந்து நாள் பயணமாக அதிகாரிகள் புடைசூழ இந்தியா வந்துள்ளார். கடன்காரன் வீட்டு வாசலுக்கு வந்தாலே வெட்கி கூசிப் போவோம் நாம். ஆயின், மேற்பார்வையிடுவதோடு மட்டுமின்றி, கட்டளைகளும் இட்டுவரும் அந்நிய நாட்டு எஜமானர்களுக்கு, வெட்கமின்றி திட்டம் நிறைவேறும் விதத்தை விளக்கிக் கொண்டிருக்கிறார்கள் 'சுதந்திர' இந்தியாவின் ஆட்சியாளர்கள். ஏனெனில், இவர் கொடுக்கப் போகும் அறிக்கை அனுசரணையாக இருந்தால்தான், ஆட்சியாளர்களின் பிச்சைப் பாத்திரத்தில் அடுத்த தவணைக்கான தொகை விழும்!

இதோ, பிரஸ்டனுடன் வந்த அதே வங்கியைச் சேர்ந்த இயக்குனரிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருக்கிறார்களே இவர்கள் நர்மதா பாதுகாப்பு இயக்கத்தின் (நர்மதா பசாவ் அந்தோலன்) செயல்வீரர்கள். நர்மதா நதியின் குறுக்கே அணைகள் கட்ட திட்டமிட்டு, உலக வங்கியிடம் கடனும் பெற்றுள்ளது அரசு. இந்த அணைகள் கட்டப்படுவதால், 248 கிராமங்கள் அழிக்கப்பட்டு, ஒரு லட்சத்துக்கும் அதிகமான பழங்குடி மக்கள் நிர்கதியாக்கப்படுவர். 60,000 ஹெக்டேர்களுக்கும் அதிகமான விளைநிலங்களும், காட்டுப் பகுதிகளும் அழிக்கப்பட்டு, சுற்றுப்புற சூழல் பாதிக்கப்படும். நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு உருவாகும். இக் காரணங்களினால், இவ்வியக்கத்தினர் பாதிக்கப்படக்கூடிய பழங்குடி மக்களைத் திரட்டி, உலக வங்கி குழுவினர் தங்கியிருந்த நட்சத்திர விடுதியின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க தடியடி நடத்தி, இவ்வியக்கத்தின் அமைப்பாளர் மேதா பட்கர் உட்பட அனைவரையும் கைது செய்து சிறையிலடைத்தது, அரசு.

நாட்டைச் சூறையாடும் கும்பலுக்கு ரத்தினக் கம்பளம் விரித்து, குழைந்து குழைந்து வாலாட்டும் அரசு, தங்கள் வாழ்வு பறிக்கப்படுவதை எதிர்த்துப் போராடும் பழங்குடிகளைக் குண்டாந்தடிகளைக் கொண்டு ஒடுக்குகிறது. இந்த அடிமை நாய்களை, இவர்களின் ஆண்டான்களோடு நாம் விரட்டுவது எப்போது?



படிப்பகம்